Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 11 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 11 (27.09.2004) திங்கட்கிழமை இதழ்:362

சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்

உங்கள் கண்களை இலவசமாக பரிசோதித்து கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளவும்

பல் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்று சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும்



சொலெக்ஸ் மூக்கு கண்ணாடியகம்
616 ஆஸ்பத்திரி வீதி
O.P.D முன்பாக
யாழ்ப்பாணம்

Tel.Phone: 077-855328



உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு நாளும் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் சங்கரின் மூன்றாம் ஆண்டு நினைவுநாளுமான நேற்று பிரத்தியேக இடமொன்றில் வைக்கப்பட்டிருந்த இரு மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துகிறார்.



# நாகர்கோவில் காவலரண்களை பின்நகர்த்த படைத்தரப்பு மறுப்பு!

(கொழும்பு)

**போர்நிறுத்த காலத்தில் படையினரால் முன்னகர்த்தப்பட்ட நாகர்கோவில் முன்னரங்க நிலைகளை பின்நகர்த்த முடியாதென போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு பாதுகாப்பு அமைச்சு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.**

போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி விடுதலைப் புலிகளதும், படையினரதும் முன்னரங்க நிலைகளுக்கு இடையில் 600 மீற்றர் இடைவெளி இருக்க வேண்டும். ஆனால், தற்போது இரு பகுதியினரும் தமது முனனரங்க நிலைகளை முன்நகர்த்தி 20 மீற்றருக்குள் கொண்டுவந்துள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்தது.

இந்தநிலையில், இரு பகுதியினருடனும் பேச்சு நடத்திய கண்காணிப்புக்குழு, தமது முன்னரங்க நிலைகளை பழைய நிலைக்கு அதாவது 600 மீற்றருக்கு பின்னகர்த்துமாறு இரு பகுதியையும் கேட்டிருந்தது.

கண்காணிப்புக்குழுவின் இந்த அறிவிப்புக்கே பாதுகாப்பு அமைச்சு தனது பதிலை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அது தனது கடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த சில தினங்களுக்கு மழை நீடிக்குமாம்!

(கொழும்பு)

தற்போது பெய்து வரும் மழை அடுத்த இரண்டு தினங்களுக்குத் தொடர்ந்து பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் கடும் மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அத்துடன் பலத்த மழை பெய்வதால் வெள்ளப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய ஆலோசனை சபை இப்போது தேவையில்லை!

### பேச்சை உடன் ஆரம்பிக்குமாறு ரணில் கோரிக்கை



தயாராக இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அறிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு - அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை அமைக்கப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகா கடிதமொன்றை அனுப்பிவைத்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தக் கடிதத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

## ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் கனடா பொங்கு தமிழில் பங்குபற்றினர்!

(ரொறன்ரோ)

இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகளுடன் இலங்கை

வேண்டும் போன்ற கோஷங்களை முன்வைத்து கனடாவின் ரொறன்ரோ நகரில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் சுமார் ஒரு இலட்சத்துக்

ரொறன்ரோ நகரில் உள்ள ஒன்ராறியோ நாடாளுமன்றம் அமைந்துள்ள குயின்ஸ் பார்க் பகுதியில்

# கனடா பொங்கு தமிழில் பங்குபற்றினர்!

(ரொறண்ரோ)

இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக் வேண்டும், புலிகளுடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்துமாறு கனடா அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் போன்ற கோஷங்களை முன்வைத்து கனடாவின் ரொறன்ரோ நகரில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் பங்கேற்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் கனடாவின் ரொறன்ரோ நகரில் உள்ள ஒன்ராறியோ நாடாளுமன்றம் அமைந்துள்ள குயின்ஸ் பார்க் பகுதியில் இடம்பெற்ற இந்த வரலாற்று நிகழ்வு - முன் எப்போதும் இடம்பெறாத அளவுக்கு பிரமாண்டமாக இருந்ததாக குறிப்பிடப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்குமேயானால் அதற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதற்குத்

ஆலோசனைச் சபை ஒன்றை அமைக்கப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகா கடிதமொன்றை அனுப்பிவைத்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தக் கடிதத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தக் கடிதத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டபின்னரே தேசிய ஆலோசனைசபை மூலம் பலனை எதிர்பார்க்கமுடியும்.

எனவே தேசிய ஆலோசனை சபையை ஆரம்பிக்கமுன்னர் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

## தமிழர் தாயகப் பிரதேசங்களெங்கும்

# திலீபனின் நினைவுநாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு!



(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசங்களெங்கும் நேற்று மிக உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டின் நிகழ்வுகள் - திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த நல்லூர் ஆலய முன்றலிலும், தீவகப் பகுதிகளில் - புளியங்கூடல் முத்துமாரியம்மன் ஆலய முன்றலிலும், காரைநகர் மணற்காடு ஆலய முன்றலிலும், நெடுந்தீவு பிரதேசசபை பொது மண்டபத்திலும், வடமராட்சியில் - அல்வாய் முத்துமாரியம்மன் ஆலய முன்றலிலும், தென்மராட்சியில் சங்கத்தானை முருகமூர்த்தி ஆலய முன்றலிலும் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தல்களில் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது. (12 ஆம் பக்கம்

# துப்பாக்கிப்பிரயோகத்தில் முன்னாள் சிப்பாய் காயம்!

மட்டக்களப்பின் ஏறாவூர் பகுதியில், முன்னாள் இராணுவச் சிப்பாய் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் அவர் படுகாயத்துக்குள்ளாகியுள்ளதாக மட்டகளப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. இதில் ஏ.எம்.மொகமட் அன்சார் (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சம்பவதினம் இவர் ஏறாவூரின் கடற்கரை நகரான சவுக்கடி என்ற கிராமத்தில் மீன் வாங்கிக்கொண்டு திரும்பி வரும் வழியிலேயே இவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுவிட்டனரெனவும், தாக்குதலுக்கிலக்கான நபர் தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரேயே இராணுவத்திலிருந்து விலகிச்சென்றவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

## மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாணசபை
## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (காப்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**
**'ஆஅவ' கடன் இல.2003-SRI(SF)**

# கேள்வி அறிவித்தல் இல:33

### குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (காப்) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ( ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழல்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த (ICTAD) பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | VA/CAARP/HS/03 | வவுனியா, செட்டிக்குளம் மாவட்ட வைத்தியசாலையில் நிர்வாகக் கட்டடம் மற்றும் வெளி நோயாளர் சிகிச்சை பிரிவு நிர்மாணம். | M5 (கட்டடங்கள்) | 140,000/- |
| 02. | AM/CAARP/HS/11 | அம்பாறை, திருக்கோவில் மாவட்ட வைத் தியசாலையில் 40 படுக்கைகள் கொண்ட பெண்கள் விடுதி, மற்றும் திருத்த வேலைகள் நிர்மாணம். | M5 (கட்டடங்கள்) | 96,000/- |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் ( ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் ( NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M7க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003. 07. 01 ஆம் திகதிக்குப் பின்பு தங்களை ஒப்பந்தக்காரர்களாகப் பதிவுசெய்து ஒத்த தன்மையான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ செய்து திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

IV. "(ICTAD)" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ( CAARP) வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை *கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலையில்* பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026 - 2227434, தொலைநகரி 026 - 2227401, மின்னஞ்சல் **necord@sltnet.lk.**

06. ஒப்பந்த ஆவணங்களை 2004 புரட்டாதி 24 இல் இருந்து 2004 ஐப்பசி மாதம் 08 ஆம் திகதி வரை முற்பகல் 9. 30 மணியிலிருந்து பிற்பகல் 3. 00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1,000/= செலுத்திக் கொள்வனவு செய்யப்படலாம்.

07. கேள்வி கோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருப்பதுடன் 8 வது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட திகதி, நேரத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

08. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச்சபை, *NECORD 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை* என்ற முகவரிக்கு 2004 ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி முற்பகல் 11. 30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 ஐப்பசி மாதம் 8 ஆம் திகதி முற்பகல் 11. 30 மணிக்கு எமது காரியாலயத்தில் நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
**கேள்விச்சபை தலைவர்,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்,**
**140, மின்சார நிலைய வீதி,**
**திருகோணமலை.**

(சி-3199)

# பண்பாட்டுக் கோலங்கள் கண்காட்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் மாதம் 1ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரின் ஏற்பாட்டில் பிரதேச செயலக மண்டபத்தில் 'பண்பாட்டுக் கோலங்கள்' என்ற கண்காட்சி நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

குறிப்பிட்ட தினங்களில் - காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் பாரம்பரிய பொருட்கள், தொல்லியல் ஆய்வுகள், சிற்பங்கள், ஓவியங்கள், தையல், நெசவு, தும்புப் பொருட்கள், பனை அபிவிருத்திப் பொருட்கள் என்பன காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

அத்தோடு வலிகாமம் வடக்குப் பிரதேசப் படைப்பாளிகளின் வெளியீடுகள், அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த அறிஞர்கள், மற்றும் சமய, சமூக அரசியற் பிரமுகர்கள், கலைஞர்கள் ஆகியோரின் அரிய புகைப் படங்களும் இதில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

## வங்கிக் கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் கிளை ஒன்று இந்த மாதம் 30 ஆம் திகதி நெல்லியடியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தக்கிளை குடாநாட்டில் திறந்து வைக்கப்படும் மூன்றாவது கிளையாகும். ஏற்கனவே, யாழ். நகரப்பகுதியிலும், சுன்னாகத்திலும் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைகள் இயங்கி வருகின்றன.

இவ்வளவு காலமும் ஹற்றன் நஷனல் வங்கியின் சேவையைப் பெறுவதற்காக, யாழ்.நகரப்பகுதிக்கு வந்த வடமராட்சி மக்களைப் பொறுத்த வரையில் இது பயனுள்ள விடயமாகும். (14)

## வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு முக்கிய வீதிகளைப் புனரமைக்க 88 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி மூலம் வடமராட்சி கிழக்கில் இதுவரை புனரமைக்கப்படாத பொற்பதி, அம்பன், குடத்தனை, நாகர்கோவில் போன்ற கிராமப் பகுதிகளில் உள்ள முக்கிய வீதிகளே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கடந்தகால போர் சூழல் காரணமாக சேதமடைந்த இந்த வீதிகள் இருபது வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறு விளம்பரம்

முகமதி கிறைண்டிங் மில்

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் பூடு, ஊறுகாய், மோர் மிளகாய், சீயாக்காய் பவுடர், பிளீச்சிங் பவுடர், ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் - முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ், இல.777, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/3022)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)
(சி-2725)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த
மதுர

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை
தனுஸ், சிந்துலானி கருணாஸ் மற்றும் மணிவண்ணன்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Return to two moon junction
(சி-2723)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 6.00 (பு.நே)

சிற்றி சினிமா பண்டத்தரிப்பு
விஜயகாந், நமீதா, பிரபுதேவா மற்றும் வடிவேல் நடிப்பில்

(ரீல்ஸ்)
எங்கள் அண்ணா
(சி-3195)
தினசரி காட்சிகள் : , 3.00, 7.00 (பு.நே)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### ஆறாவது அகவையில்



பெயர் : ச.நிலக்ஷி
முகவரி : இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி.

### மூன்றாவது அகவையில்



பெயர் : ஜெ.ஜென்சிகா,
முகவரி : மிருசுவில் வடக்கு, மிருசுவில்.

### மூன்றாவது அகவையில்



பெயர் : ச.கலாதரன்,
முகவரி : வைமன் வீதி, நல்லூர்.

### இரண்டாவது அகவையில்



பெயர் : இ.விநோஜன்,
முகவரி : வட்டு. கிழக்கு, சித்தங்கேணி.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------
------------------------
முகவரி :------------------------
------------------------
பிறந்த ஆண்டு:------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்

## தேர்தலுக்கு அடையாள அட்டை

# பிரேரணையில் திருத்தம் செய்ய எதிர்க்கட்சிகள் தயாராகின்றன!

தேர்தல் வாக்களிப்பின்போது அடையாள அட்டைகளைப் பயன்படுத்தும் அரசாங்கத்தின் நாடாளுமன்ற பிரேரணையில் சில திருத்தங்களைச் சமர்ப்பிக்கப் பொது எதிர்க்கட்சி தயாராகி வருகிறது.

எனினும் இந்தப் பிரேரணை எவ்வித திருத்தமும் இன்றி எதிர்வரும் 7 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு எடுக்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொது எதிர்க்கட்சியில் உள்ளடங்கும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன, வடக்கு - கிழக்கு மற்றும் தோட்டப் பகுதிகளில் பெருமளவானோருக்கு அடையாள அட்டைகள் இல்லையாதலால் அவர்களுக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்தப் பிரேரணையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறியுள்ளன. இல்லாவிடில் அடையாள அட்டைகளைக் குறிப்பிட்ட காலத்துக்குள் பெற்றுக் கொடுப்பது தொடர்பான உறுதிமொழியாவது- சட்ட மூலம் நிறைவேற்றப்படும் முன்னர் தரப்படவேண்டும் என்பதை இந்தக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. அதேநேரம் சுதந்திர தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்டு, அந்த ஆணைக்குழுவும் அடையாள அட்டைகள் குறிப்பிட்ட காலத்துக்குள் பெற்றுக் கொடுக்கப்படுவதற்கான உறுதிப்பாட்டை வழங்க வேண்டுமென பொது எதிர்க்கட்சி கோரிவருகின்றது.

இந்த நிலையில் அரசாங்கம் எதிர்பார்ப்பதைப் போன்று இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தோட்டத்துறை மக்களுக்கு அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுக்கும் வகையில், உரிய வாக்குறுதி இல்லாமல் தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டைகளைப் பயன்படுத்தும் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியாதென, ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் முத்து சிவலிங்கம் இது தொடர்பாகக் கூறும்போது -

தாம் இந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தப்போவதாக தெரிவித்தார். ஏற்கனவே அடையாள அட்டைகள் இல்லாத தோட்டத்துறை மக்களுக்கு அடையாள அட்டைகளை உரிய காலத்திற்கு முன்னர் பெற்றுக் கொடுக்க முடியாது போனால், தேர்தல் ஒன்றின்போது சத்தியக் கடதாசியை ஏற்றுக்கொள்ளலாம் என அரசாங்கம் மாற்று யோசனை ஒன்றை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு தெரிவித்துள்ளது.

எனினும் இது இன்னமும் நிச்சயப்படுத்தப்பட்ட ஒன்றாக தெரிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் தோட்டத் தொழிலாளர்களின் அடையாள அட்டை பிரச்சினைகளை தீர்க்காமல் அரசாங்கம் அதன் சட்ட மூலத்தை நிறைவேற்றிக்கொள்ள முனையுமானால், அது அரசாங்கத்துக்கும் தமக்கும் இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கவே செய்யுமென அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார். (01)

## படையிலிருந்து தப்பியோரால் நாட்டில் குழப்பங்கள்!

(கொழும்பு)

கடந்த காலத்தில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய 51 ஆயிரத்துக்கும் அதிகமானோர், குற்றச் செயல்களில் ஈடுபட்டிருப்பதாகவும், இவர்களால் நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்குகள் பாதிப்படைந்திருப்பதாகவும், அரசியல் சாசன மறுசீரமைப்பு அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் ரி-56 ரக துப்பாக்கிகள் மற்றும் சிறிய ஆயுதங்களுடன் சமூகத்தில் நடமாடுவது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வெளிநாடுகளுக்கு ஆட்களை

# கடத்தும் நாடுகளின் பட்டியலில் இலங்கை!

(நியூயோர்க்)

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்தும் சம்பவங்கள் மிக அதிகமாக நடைபெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல், தொடர்பான அமெரிக்க ஆய்வறிக்கையின்படி -

இலங்கையில் நூற்றுக்கணக்கானவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்லும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சட்விரோதமாகப் பெண் தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளில் ஒன்றாக இலங்கை இருந்துவருகிறது.

தாய்லாந்து, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளில் இருந்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு ஆட்கள் இலங்கைக்கு கொண்டுவரப்படுகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த கொழும்பில் மூன்று நாள் மாநாடு ஒன்றை அமெரிக்கா நடத்தவிருப்பதாகவும் இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரஷ்ய மருத்துவ பட்டத்தை அங்கீகரிக்க நீதிமன்றம் உத்தரவு

ரஷ்யாவில் மருத்துவ பட்டப் படிப்பை பூர்த்தி செய்தவர்களின் மருத்துவ பட்டங்களை, இலங்கை மருத்துவ ஆணைக்குழு அங்கீகரிக்கவேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட நீதிமன்றில் இடம்பெற்ற இது தொடர்பான வழக்கு விசாரணையின் போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ரஷ்யாவில் மருத்துவ பட்டப் படிப்பை பூர்த்திசெய்பவர்கள், இலங்கையில் மருத்துவ தொழிலில் இணைத்துக்கொள்ளப்படுவதில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் தொடா பாகவும் ரஷ்ய மருத்துவ பட்டப் படிப்பை இலங்கையில் அங்கீகரிக்க வேண்டும் என்பது தொடர்பாகவும். செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரணை செய்த நீதிபதிகள் குழு இந்தத் தீர்ப்பை வழங்கியது. (01)

## சாதனைபடைக்க முயன்ற இளைஞர் பரிதாப மரணம்

(கொழும்பு)

தியலும நீர்வீழ்ச்சியின் உச்சியிலிருந்து கயிற்றின் மூலம் இறங்கி சாதனை ஏற்படுத்தமுயன்ற தமிந்ததாப்ரு என்ற இளைஞன் தவறி வீழ்ந்து மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. தமிந்த தாப்ரு என்ற இந்த இளைஞர் ஏற்கனவே, பம்பரகந்த மலையில் இருந்து இறங்கி சாதனை ஒன்றை ஏற்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் நிலந்த என்ற இளைஞன் தியலும நீர்வீழ்ச்சியின் உச்சியிலிருந்து ஏற்படுத்திய சாதனையை முறியடிக்கும் வகையிலே நேற்றுமுன்தினம் தமிந்த தாப்ரு இந்த முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மலையிறங்கும் நிகழ்வு இலங்கையில் விளையாட்டுத் துறையில் பதிவு செய்யப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

## பொங்குதமிழ் நிகழ்வுக்கு புலிச்சாயம் பூச முற்படுகின்றனர்

### யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில், வடக்கு - கிழக்கின் தமிழ்ப் பகுதிகளிலும் பெருமளவிலான தமிழ்மக்கள் ஒன்றிணைந்து நடத்திய நிகழ்வுதான் பொங்குதமிழ்.

புலிகள்தான் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளார்கள் எனக் கூறி, பொங்குதமிழுக்கு புலிச்சாயம் பூச சிலர் முற்படுகின்றனர்.

இவ்வாறு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் - கனடாவில் நேற்று முன்தினம் நடந்த பொங்குதமிழ் நிகழ்வுக்கு கனடிய அரசு விசா வழங்காததையிட்டு பி.பி.சிக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உண்மையில் பொங்குதமிழ் நிகழ்வை ஏற்படுத்தியவர்கள் நாங்களும் பல்கலைக்கழக மாணவர்களுமேயாகும். எங்களைக் கேட்காமல் கனேடிய தூதரகம் விசா தர மறுத்தமை எமக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது.

எங்கள் அமைப்புக்கு விடுதலைப் புலிகளின் ஆதரவு இருக்கிறது. அவர்களையும் தமிழ் மக்களையும் பிரிக்கமுடியாது. தமிழ் மக்களின் வழிகாட்டிகளாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

கனேடிய தூதரகத்தில் இருந்து எம்மை செல்லவிடாமல் தடை செய்வதாக ஒரு கடிதத்தையோ, வேறு ஆவணங்களையோ அவர்கள் தரவில்லை. விசா வரத் தாமதம் ஆகும் என்றுதான் கூறினார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.



# இந்தியாவை வெல்வதற்கு அதிக போராட்டம் தேவை!

## கில்கிறிஸ்ட் தெரிவிப்பு



(மும்பை)

இந்தியாவுடன் விளையாடி வெற்றிபெற அதிக முயற்சி தேவை என்று அவுஸ்ரேலிய அணி கப்டன் கில்கிறிஸ்ட் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிராக 4 டெஸ்ட் போட்டிகளில் மோத அவுஸ்ரேலிய அணி இந்தியா வந்துள்ளது. அவுஸ்ரேலிய அணி கப்டன் பொண்டிங் ஐ.சி.சி.சம்பியன் கிண்ண கிரிக்கெட்டின்போது காயமடைந்தார்.

இதனால் இவர் அவுஸ்ரேலிய அணியில் இடம் பிடிக்க வில்லை. விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட் தலைமையில் இந்திய அணியை அவுஸ்ரேலியா எதிர்கொள்ள இருக்கிறது.

கடந்த 1969 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவுஸ்ரேலிய அணி இந்தியாவில் டெஸ்ட்தொடரை கைப்பற்றவில்லை. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்டீவ்வோ தலைமையிலான அணி இந்தச் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பை அதிகப்படுத்தியது.

ஆனால் லக்ஸ்மன், ஹர்பஜன், டிராவிட் ஆகியோர்களின் அசத்தல் ஆட்டத்தால் அவுஸ்ரேலியாவின் கனவு தகர்ந்தது. 30 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும், இந்தப் பரிதாபத்துக்கு விடைகொடுக்க இதுவே சரியானநேரம்.

கடந்த ஆண்டு இலங்கையில் நடந்த 3 டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்ரேலியா வெற்றி பெற்றது. இதன்மூலம் ஆசிய கண்டத்திலும் எங்களால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை அதிகமாகி இருக்கிறது. இந்தியாவுக்கு எதிரான இந்த பந்தயம் சவால் நிறைந்த ஒன்று. அணி வீரர்கள் அனைவரும் தங்கள் திறமையை சரியான நேரத்தில் காட்டினால் இந்தியாவை எங்களால் தோற்கடிக்க முடியும் என்றார்.



# அவுஸ்ரேலியாவுடனான தொடரில் டெண்டுல்கர் ஆடுவது சந்தேகம்!

## மருத்துவர் தெரிவிப்பு



(மும்பை)

இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் மோதும் டெஸ்ட் போட்டியில் இந்திய அணிவீரர் சச்சின் டெண்டுல்கர் ஆடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய வீரர் டெண்டுல்கருக்கு ஏற்பட்ட காயத்துக்கு லண்டனில் உயர்மட்ட சிகிச்சை அளிக்கப்பட்டது. இருந்த போதும் இந்த சிகிச்சையால் பெரிய அளிவில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட்சபை மருத்துவர் ஆனந்த் ஜோஷி டெண்டுல்கரை ஆய்வு செய்தார். இதன் பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில் -

டெண்டுல்கருக்கு ஏற்பட்டுள்ள காயம் இன்னும் குணமாகவில்லை. இதற்கு சிறந்த மருந்து ஓய்வுதான். குறைந்த பட்சம் 3 வாரங்கள் டெண்டுல்கர் ஓய்வு எடுத்தாக வேண்டும். சில சமயங்களில் இது 2 மாதம் வரைகூட நீடிக்கலாம். எனவே பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும் என்றார்.

இந்தியா வந்துள்ள அவுஸ்ரேலிய அணி வருகிற 30 ஆம் திகதிமுதல் மும்பை லெவன் அணிக்கு எதிராக 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் மோதவுள்ளது. இந்தப் போட்டியில் டெண்டுல்கர் கலந்து கொள்வாரா? என்ற கேள்விக்குறி ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மும்பை கிரிக்கெட் சங்க செயலாளர் ரத்னாகர் கூறும்போது - டெண்டுல்கருக்கு என்று கடைசி நேரம்வரை ஒரு இடம் ஒதுக்கி வைக்கப்படும். அவர் ஆட விருப்பம் தெரிவித்தால் கண்டிப்பாக அணியில் இடமுண்டு என்றார்.

# வலுவிழந்தோர் ஒலிம்பிக் காட்சிகள்...









# அவுஸ்ரேலியாவுடனான முதல் டெஸ்டில் சச்சின் டெண்டுல்கர் விளையாடுவாராம்!

## கங்கூலி நம்பிக்கை தெரிவிப்பு



இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் சச்சின் டெண்டுல்கர். இடது முழங்கையில் ஏற்பட்ட காயத்தால் அவர் அவதிப்பட்டு வருகிறார்.

இதனால் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பெங்களூரில் வருகின்ற 6 ஆம் திகதி தொடங்கும் முதல் டெஸ்டிலும் அவர் ஆடுவாரா என்ற சந்தேகம் நிலவி வந்தது.

இந்த நிலையில் டெண்டுல்கர் முதல் டெஸ்ட்டில் ஆடுவார் என்று கப்டன் கங்கூலி கூறியுள்ளார். அவுஸ்ரேலிய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது -

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பெங்களூரில் நடைபெறும் முதல் டெஸ்டில் டெண்டுல்கர் நிச்சயமாக ஆடுவார். அவர் ஆடுவது 100 சதவீதம் உறுதியானது.

மேலும் வருகிற 30 ஆம் திகதி இந்தியா சீனியர்ஸ் - இந்தியா 'ஏ' இடையேயான பயிற்சி ஆட்டத்திலும் அவர் ஆடுவார் என்று எதிர்பார்க்கிறேன். பயிற்சி ஆட்டத்தில் டெண்டுல்கர் ஆடுவது அவருக்கும் நல்லது. அணிக்கும் நல்லது.

முதல் டெஸ்டில் அவுஸ்ரேலிய கப்டன் பொண்டிங் ஆடவில்லை. இது அந்த அணிக்கு பலவீனம்தான். அதே நேரத்தில் பொண்டிங் இல்லாவிட்டாலும் சிறப்பாக ஆடும் வீரர்கள் அந்த அணியில் உள்ளார்கள்.

இவ்வாறு கங்கூலி கூறினார்.


## கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

கணக்கியல் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகள் பொருத்தமான ஆண்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை:**

01. கல்வித்தகைமை - க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதப் பாடங்களில் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

02. அகவை - 16 தொடக்கம் 21 வரை.

*குறிப்பு :*

01. வேண்டுகை முடிவு நாள் : 05.10.2004.

02. நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள் : 09.10.2004 காலை 9.00 மணி.
இடம் :- கிளி/மத்திய கல்லூரி,
ஏ-9 வீதி,
கிளிநொச்சி.

04. நேர்முகத்தேர்வுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும், அவற்றின் நிழற்பட படிகைகளையும் கொண்டு வருக.

05. பயிற்சி காலத்தில் 4000/- ரூபா உதவிக்கொடுப்பனவுடன் தங்குமிட வசதி வழங்கப்படும்.

06. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

07. பயிற்சி நெறிக்காலம் :- ஓர் ஆண்டு.

08. பயிற்சியின் பின் நிதித்துறை நிறுவனங்களில் ஐந்து ஆண்டுகள் பணியாற்ற வேண்டும்.

09. பயிற்சியின் நிறைவில் தகைமைச்சான்றிதழுடன் பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறையின் சம்பளத்திட்டத்திற்கமைவாகச் சம்பளம் வழங்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி.

(C/2862)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிடுத்திய அழைப்பும்



அமரர்
திரு.விஜயநாதன் விக்கினேஸ்வரராசா
(அத்தான் / ராஜன்)
வீமன்காமம் தெல்லிப்பளை
(லங்கா சீமெந்து லிமிட்டெட் உத்தியோகத்தர் தெல்லிப்பளை)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 25.10.1960 | 28.08.2004 |

முப்பத்தொரு நாளென்ன
முந்நூறு ஆண்டுகள் கடந்தாலும்
மாறுமோ உங்கள் நினைவு
நெஞ்சமெல்லாம் ஆறுமோ எம் சோகம்

இன்று (27.09.2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி பிள்ளைகள்.
களவாவோடை,
ஏழாலை தெற்கு சுன்னாகம்.

# அஞ்சல் திணைக்களம் நடத்திய சிறந்த ஊழியர் போட்டி முடிவுகள்!

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு வட மாகாணத்திலுள்ள தபால் நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களில் சிறந்த ஊழியர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சர்வதேச அஞ்சல் தினமான - ஒக்டோபர் 9 ஆம் திகதி யாழ். மாவட்ட பிரதான தபால் நிலையத்தில் வைத்து பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

வெற்றியீட்டிய ஊழியர்களின் விபரம் வருமாறு :

**சிறந்த அஞ்சல் சேவை உத்தியோகத்தர் (வகுப்பு I)**

முதலாம் இடம் : க.பாரதிதாசன் - சுண்டுக்குளி அஞ்சல் அலுவலகம், 2 ஆம் இடம் : அ.அ.சிறில் - மன்னார் அஞ்சல் அலுவலகம், 3 ஆம் இடம் : வை.அந்தோனிப்பிள்ளை - மானிப்பாய் அஞ்சல் அலுவலகம்.

**சிறந்த அஞ்சல் சேவை உத்தியோகத்தர் (வகுப்பு II)**

முதலாம் இடம் : செல்வி வி.து. செபஸ்ரினா - மன்னார் அஞ்சல் அலுவலகம், 2 ஆம் இடம் தி.சறோஜினி - மன்னார் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம், 3 ஆம் இடம் க.ரவீந்திரராஜ் - மடுக்கோவில் அஞ்சலகம்.

**சிறந்த உப அஞ்சலதிபர்**

முதலாம் இடம் : ஆ.எ.இ.றோச்- பள்ளிமுனை உப அஞ்சல் அலுவலகம், 2 ஆம் இடம் : செல்வி ந.தாரணி - புத்தூர் உப அஞ்சல் அலுவலகம், 3 ஆம் இடம் இ.ஸ்ரீஸ்கந்தராஜ் - புன்னாலைக்கட்டுவன் உப அஞ்சல் அலுவலகம்,

**சிறந்த அஞ்சலாளர்**

முதலாம் இடம் : ச.தேவதாசன்- ஊர்காவற்துறை அஞ்சலகம், இரண்டாம் இடம் : மா.உதயகுமார் - புத்தூர் உப அஞ்சல் அலுவலகம், 3 ஆம் இடம் : இ.இராஜகுணபாலன் - மடுக்கோவில் அஞ்சலகம்,

**சிறந்த கோலவுடைப் பணியாளர்**

முதலாம் இடம் : க.மு.சிவகுருநாதன் - பருத்தித்துறை அஞ்சலகம், 2 ஆம் இடம் - தா.சி.சிவகுமார் - பருத்தித்துறை அஞ்சலகம், 3 ஆம் இடம் : லூ.லெ.அந்தோனிப்பிள்ளை - மன்னார் அஞ்சலகம்.



திலீபன் நினைவுதினத்தை முன்னிட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணியில் பங்குகொண்டவர்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். (12)

## தபாலக சிற்றூழியர் பதவியில் 90 இற்கும் அதிகமான வெற்றிடம்

யாழ். தபாலகத்திற்கான பணிகளில் தொண்ணூற்றுக்கும் அதிகமான சிற்றூழியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

தற்போது யாழ். தபாலகப் பணிகளுக்கென பெருமளவு சிற்றூழியர்கள் தேவைப்படுவதாகவும், அதற்கெனத் தாம் தொண்ணூறுக்கும் அதிகமான சிற்றூழியர்களைச் சேர்த்துக்கொள்ளவுள்ளதாகவும், யாழ்ப்பாண பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இந்தச் சிற்றூழியர் நியமனங்கள் தொடர்பாக, கொழும்பு அஞ்சல் மா அதிபரின் அனுமதி கிடைத்தவுடன் நேர்முகத் தேர்வுகள் இடம்பெறும் எனவும்,

இந்த நேர்முகத் தேர்வுக்காக விண்ணப்பிக்காதோருக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் தினங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மூவிமொண்டே நிறுவனம் வலிமேற்கில் நிவாரணம்!

வலிமேற்குப் பிரிவில் வசிக்கும் வறுமைக்கோட்டின்கீழ் உள்ளோர்க்கும், இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு மூவிமொண்டா நிறுவனம் மூலம் உதவிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை வலிமேற்குப் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

மீன்பிடி தொழிலாளர்களுக்கு மீன்பிடித் வள்ளங்கள், வலைகள், தச்சுத் தொழிலாளர்களுக்கான உபகரணங்கள், கூலிவேலை செய்யும் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான உதவிகளை இந்த நிறுவனம் மேற்கொள்ளவுள்ளதாக பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கெனத் தெரிவு செய்யப்படுவோர் இரண்டு அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்ப எண்ணிக்கை உடையவர்களாகவும், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவும் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு இந்த உதவிகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைத் தாம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். (48)

## கிராம அலுவலர் பற்றாக்குறை

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம அலுவலர் பற்றாக்குறை இருப்பதனால், அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி அரச அதிபர் பிரிவில் 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 10 கிராம அலுவலர்கள் கடமையாற்றுகின்றனர். இதில் இரண்டுபேரைத் தவிர மிகுதி எட்டுப் பேரும் இரண்டு பிரிவுகளில் கடமையாற்றுகின்றனர்.

யுத்தம் ஓய்ந்து சமாதான காலப் பகுதியில் பெருமளவு மக்கள் இந்தப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ளனர். இதனால் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய பணிகள் கிராம அலுவலர் பற்றாக்குறையால் பாதிக்கப் பட்டிருக்கிறது (14)

போர் நிறுத்த காலத்தில்

# சிங்கள மக்களே அதிகமான நன்மைகளை அடைகின்றனர்!

சாவகச்சேரி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர்

இன்று சிங்கள தேசத்தினது பொருளாதாரம் மிக மோசமான வகையில் சிதைந்துவிட்டது. இலட்சக்கணக்கான தமிழர்கள் தமது வியர்வை சிந்தி உழைத்து இலங்கைக்கு அனுப்பும் டொலர்களும், ஸ்ரேலிங் பவுண்களும்தான், இன்று இலங்கைக்கு அன்னியச் செலாவணியை ஈட்டித்தரும் ஒன்றாக இருக்கிறது. இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்தின்பின் தோன்றிய சமாதானச் சூழலால் தமிழர் நாம் எது விதமான நன்மைகளையும் பெற்றுவிட்டதாகக் குறிப்பிடமுடியாதுள்ளது. மாறாக, சிங்கள மக்களே நன்மைகளைப் பெற்றுவருவதை அவதானிக்க முடிகிறது.

இதனால்தான் இந்தச் சமாதானச் சூழலினால் ஏற்படும் நன்மைகளைத் தமிழர்கள் நாமும் அனுபவிக்க - அழிவடைந்த எமது பிரதேச அபிவிருத்தியை நாமே முன்னெடுக்க என, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என,

அண்மையில் கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்தில் நடைபெற்ற, தியாகி திலீபனது 17 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சாவகச்சேரி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சந்திரசேகரம் தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

இன்று இலங்கையிலே பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளாக அவை பெயரில் மட்டுமே தேசியம் என்பதை வைத்துக்கொண்டு, செயலில் பேரினவாதக் கட்சிகளாகவே செயற்பட்டு வருகின்றன. ஆரியர் இந்தியாவுக்குள் நுழைய முன்னரே இந்த இலங்கை மண்ணிலே திராவிடர்கள் - தமிழர்கள் பெருமைமிகு வாழ்வு வாழ்ந்தவர்கள் என்பது ஆதாரபூர்வமான உண்மையாகும். இருந்தும் இடையில் வந்த சிங்களவர்களால் எமது மொழி, கலை, பண்பாடு, கல்வி, பொருளாதாரம் எல்லாமே காலம் காலமாக மறுக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வந்ததே வரலாறாக உள்ளது. தமிழின எதிர்ப்பு என்பதே எந்த ஒரு பேரினவாதக் கட்சியினதும் பிரதான கொள்கையாக - ஆட்சிபீடம் ஏறுவதற்கான கோஷமாக இருந்து வந்துள்ளது.

இன்று பல்வேறு நாட்டு இராணுவ அதிகாரிகளும் இலங்கை வந்து, அரசுக்கு ஆலோசனை வழங்குகின்றனர். எதற்காக? திருகோணமலை நகரத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள அக்கறைக்காகவே அவர்களது வருகையும், ஆலோசனைகளும். தென்கிழக்கு ஆசியாவின் திறவுகோல் திருகோணமலையேயாகும். இதற்காக - இந்துமா சமுத்திரத்தில் தமது அதிகாரத்தைப் பேணிக் கொள்வதற்காக திருகோணமலை நகரத்தில் முக்கியத்துவம்பெற விரும்புகின்றனர்.

எமது தேசியத் தலைமை எவருக்கும் விலைபோகாதது. இந்தத் தலைவரது காலத்திலேயே எமக்கு விடுதலை கிடைக்கவேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும் எனத் தெரிவித்தார். (31)

## கெருடாவில் இறங்குதுறை புனரமைப்புப் பணி ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கிலுள்ள கெருடாவில் இறங்குதுறையைப் புனரமைக்கும் நடவடிக்கையில் அந்தப் பகுதிக் கடற்தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த இந்தத் துறைமுகத்தில் காணப்படும் முருகைக் கற் பாறைகளில் மோதிப் படகுகள் சேதமடைந்து வருகின்றன.

இந்த இறங்குதுறையை ஆழப்படுத்தத் தேவையான நிதியை யாழ். செயலகம் ஊடாக நிகொட் அமைப்பு வழங்கியுள்ளது. இதனையடுத்து மீனவ சங்கங்கள் தமது தொழிலாளர்களை ஒன்று திரட்டி, மனிதவலு மூலம் இறங்குதுறையை ஆழப்படுத்தும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

எனினும், கரையோரப் பகுதியில் காவற்கடமையில் இருந்த படையினர் படைத் தலைமையகத்திடம் அனுமதி பெறவில்லை எனக்கூறித் தடுத்து நிறுத்த முற்பட்டவேளையிலும் மீனவர்கள் அதனை அலட்சியம் செய்து தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த போர்ச்சூழ்நிலையால் சுமார் 10 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாதிருந்த இந்த இறங்குதுறையால் கடல் தொழிலாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதற்கு முன்னரும் பலதடவைகள் - இந்த இறங்குதுறையை மீனவர் சங்கத்தினர் புனரமைக்க எடுத்த நடவடிக்கைகள் படைத்தரப்புக்கும், மீனவர் சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்டது இழுபறி நிலைகளால் தாமதமடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (14)

## பொதுச்சந்தை இல்லை; மட்டுவில் மக்கள் அவதி!

(மட்டுவில்)

மட்டுவில் பகுதியில் பொதுச் சந்தை ஒன்று இல்லாமையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். விவசாயக் கிராமங்களான மட்டுவில், சரசாலைப் பகுதி விவசாயிகள் தமது விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும், பொதுமக்கள் தமக்குத் தேவையான மரக்கறி வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சாவகச்சேரிப் பொதுச் சந்தையையே நாடிச் செல்கின்றனர்.

அவ்வாறு செல்லமுடியாதவர்கள், அருகிலுள்ள சில்லறைக் கடைகளில் அதிகவிலை கொடுத்து விரும்பியோ, விரும்பாமலோ அங்குள்ள பொருட்களை மட்டுமே வாங்கவேண்டியுள்ளது.

மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் முன்னர் இயங்கிவந்த பொதுச் சந்தை மீள்குடியமர்வுக்குப் பின்னர் இயங்கவில்லை.

இந்தச் சந்தையை அல்லது பிறிதொரு இடத்தில் ஒரு சந்தையை இயக்குவதற்கு - சாவகச்சேரி பிரதேசசபையினரும், மட்டுவில் பகுதி விவசாய சம்மேளனங்களும் மற்றும் பொது அமைப்புக்களும் முன்னின்று செயற்படவேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (24)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கொமர்ஷல் வங்கிக்கு லீசிங் வசதிகள்

கொமர்ஷல் வங்கி நெல்லியடி கிளைக்கு லீசிங் வசதிகள் செய்து கொடுப்பதற்காக, கொமர்ஷல் வங்கி மேலதிகாரிகள் கொழும்பிலிருந்து மிக விரைவில் வரவுள்ளனர்.

லீசிங் வசதிகள் பெற விரும்புவர்கள் நெல்லியடி கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளலாமென முகாமையாளர் தெரிவித்தார். (116)

### தையல் ஊசியை விழுங்கிய சிறுவன்!

தையல்மெசின் ஊசியை விழுங்கிய சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை வடமராட்சி பொலிகண்டியில் இடம்பெற்றது. இந்தப் பகுதியைச் சேர்ந்த இந்திரகுமார் கஜன் (வயது 3) என்ற சிறுவன் தையல்மெசின் ஊசியை வாயில் வைத்து விளையாடியபோது தவறுதலாக ஊசி உட்சென்றுவிட்டது.

ஊசியை எடுப்பதற்கு வைத்தியர்கள் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர். (122)

### கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் நிலையில்

குருநகரில் அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் யாழ்.கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நிறுவப்பட்டுவரும் குளிரூட்டும் நிலையம் பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளது.

இறால், நண்டு, மீன், கணவாய் போன்றவற்றைக் கொள்வனவு செய்து பதனிட்டு சந்தைப் படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்காக இந்த நிலையம் உபயோகப்படுத்தப்படவுள்ளது. (206)

### தனியார் வாகனத் தரிப்பால் இடநெருக்கடி

பருத்தித்துறை பஸ் தரிப்பிட நிலையத்தில் தனியார் வாகனங்கள் தரித்து நிற்பதனால் பேருந்துகள் தரித்து நின்று செல்வதற்குப் பெரும் இடையூறுகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சில வேளைகளில் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

தனியார் பஸ்கள் நிறுத்துவதற்குத் தனியானதொரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (122)

### யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் உதவிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் கடந்த இரண்டு, மூன்று தினங்களாக யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த உதவிகள் - ஏ 9 பாதை திறக்கப்பட்ட பின்னர் வந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கும், இதுவரை எந்த நிறுவனத்தின் ஊடாகவும் நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கும் - வீட்டுப் பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட சுமார் 630 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டு பாய், அலுமினியப் பாத்திரம், குடம், வாளி, அலவாங்கு, கூரைவிரிப்பு உட்பட சுமார் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# அவள் காத்திருப்பாள்



முருகு பாரிமகன்



சிறுகதை



கலாசரம்

அருவருக்கத்தக்கதும், ஆபத்து நிறைந்ததுமாக உலகம் மாறிவிட்டது. மனித நேயத்துக்கும் அப்பால் மனித வதைகள் மேலோங்கி நிற்கின்றன.

எலும்புக்கூடுகளின் புதைகுழிகளில் ஏறிநின்று கொண்டே, அரசியல் அதிகாரத்தைத் தேடுகின்ற பண்பாடு தலை நிமிர்ந்து நிற்கிறது.

ஒவ்வொரு உயிரிலும் சாவின் விழும்பில் விடப்பட்டதான உணர்வுடன் தான் காணப்படுகின்றது. சாமுனையில் நின்று கொண்டே வாழ்வைத் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

கிராமங்களும, நகரங்களும் போட்டி போட்டுக்கொண்டு சாவுகளைச் சந்திக்கின்றன. வல்லவன் கைகளில் சிக்கிக்கொண்டு உலகம் தடுமாறுகின்றது.

சோகங்களையும், துன்பங்களையும் சுமந்து, சுமந்து தாங்க முடியாது துவண்டு போன மனோகரி - தொடர்ந்தும் துன்பத்தைச் சுமக்கும் திராணி அற்றிருந்தாள்.

அவளோடு இருக்கும் ஒரே மகன்- அவனுக்கும் ஏதும் நடந்து விடக்கூடாது என்பதில் அவள் அதிக கவனம் செலுத்தினாள். அவனது சிறப்பான வாழ்வுக்காக அவள் வேண்டாத தெய்வங்கள் இல்லை, நோற்காத நோன்புகள் இல்லை எனலாம்.

தாயின் மன அமைதிக்காக அவனும் நடந்து கொண்டான். அது அவளுக்குத் திருப்தியைக் கொடுத்தது.

தானும் தன்பாடுமாய், புத்தகமும் படிப்புமாய், திரிந்த மனோகரன் - தாயின் குறிக்கோளை அடைவதற்காய், அயராது கண் விழித்துப் படித்தான். பாடசாலையிலும், ஊரிலும் அவனுக்கு ஒரு மதிப்பு இருந்தது.

மனோகரன் வீட்டை விட்டு வெளியே போனால் போதும், திரும்பி வரும் வரை மனோகரியின் மனம் அல்லாடிக் கொண்டே இருக்கும். ஊரின் சூழ்நிலையை நன்கு புரிந்திருந்தாள்.

கொடூரம் நிறைந்த சூழலில் குழந்தைகளைப் படிக்க வைப்பதும், பாதுகாப்பதும் பாரதூரமான விடயம் தான் என்பதை அவள் நன்கு விளங்கிக் கொண்டிருந்தாள்.

பாடசாலை முடிந்ததும் வந்து சாப்பிட்ட கையோடு - 'ரியூசன்' வகுப்புக்கெனப் போனவன் வழமைக்கு மாறாக இன்னும் வீடு திரும்பவில்லை. -

தாயின் சிறகிலிருந்து வெளியே வந்த குஞ்சைக் காத்திருந்து, பருந்து கௌவிக் கொண்டு சென்றதுபோல், மனோகரனும் . ..!"

ஐயோ...! ஐயோ...! என்ரை பிள்ளை எங்கே! பாழ்படுவார், பத்தி எரிவார்...! என்ரை பிள்ளையைக் கொண்டு போட்டாங்களே! நான் என்ன செய்வன்... நான் என்ன செய்வன்...

அவள் தலையில் அடித்துக் கதறி அழுதாள். நிலத்தில் விழுந்து புரண்டாள். அவளது நீண்ட அழகிய கூந்தல் மண்ணில் கிடந்து நெழிந்தது.

இருண்டுபோன அந்த இரவு புலர்ந்து, மறுநாள் ஆகியும் அவள் அழுகுரல் ஓயவில்லை.

அழுவதும், எழுவதும், புரழுவதும், திட்டுவதும், ஏசுவதுமாக இருந்தாள். அவளை யாராலும் தேற்ற முடியவில்லை. எத்தனை தடவைதான் அழமுடியும். பிள்ளைகளின் இழப்புக்கும், பிரிவுக்கும் எத்தனை முறை தான் கண்ணீர் விடமுடியும். முதல் ஒருவன் இல்லாமலே அழிக்கப்பட்டான். இதனால் அடுத்தவன் விடுதலைப் போராட்டத்தில் இனி இவனுக்காக...

அழுது, அழுது அவள் களைத்துச் சோர்ந்து போனாள். உடல் நொந்து போனது, குரல் வரண்டு விட்டது. பேச நா எழவில்லை. சுருண்டு போய்க் கிடந்தாள்.

இனசன பந்தம் என்று சிலர் கூடி இருந்தனர். "இவள் பாவம் பைத்தியம் பிடிக்கப் போகுது" சிலர் தமக்குள் பேசிக் கொண்டனர்.

அவளின் மனம் எப்பிடித் தாங்கும். வாழுற, உண்ணுற வயசில இப்பிடிக் குடுத்திட்டு... சிலர் பரிதாபப்பட்டனர்.

''நியாயம், நீதி எங்கை கிடக்குது.. அதிகாரம் தலையில் ஏறி ஆட்டுது... எந்த நேரம் எது நடக்கும் என்று தெரியாமல் கிடக்குது''.

ஒரு பெரியார் பெரு மூச்சுவிட்டார். பலரும் பல கோணங்களில் பேசிக் கொண்டிருந்தனர்.

முழங்கால்களுக்கு இடையே தலையைப் புதைத்துக் கொண்டு, தேம்பிக் கொண்டிருந்த சண்முகத்தாரின் அருகில் அமர்ந்து கொண்டு ஆறுதல் கூறினான் தங்கமணி.

அப்பு எழும்பணை, நீயும் உப்பிடி மனசைக் கைவிட்டால், நாளைக்குப் படுக்கையில் விழுந்திட்டால் - ஆரணை உங்களைப் பாப்பினம். எழும்பணை.

என்று அவர் தலையை நிமிர்த்திய தங்கமணி - தனது துவாய்த் துண்டால் அவரது முகத்தைத் துடைத்தான்.

"எட தம்பி எங்களுக்குத்தான் இந்தச் சோதனையே! இவங்கள் எங்களைக் கொல்லவே துவக்கெடுத்தவங்கள். நாய் மக்கள் - கோடரிக் காம்புகள்... இனத் துரோகிகள்..

அவர் பொங்கி வந்த ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார்.

"அப்பு நாங்கள் என்ன செய்வம்... எங்கட கை வெறுங்கை அதாலை.. என்று இழுத்தான் தங்கமணி.

வெறுங்கையோ.. காட்டியிருப்பன்.. அங்கை பார் பத்துமாதம் சுமந்து பெத்து, மலம் அளைஞ்சு, சலம் அளைஞ்சு வளர்த்த அவளுக்கல்லோ வேதனை தெரியும். அவளை ஆறுதல் படுத்த ஆராலை ஏலும்.

அவர் மீண்டும் பெருங்குரல் எடுத்து அழத் தொடங்கினார். தங்கமணி அவரைத் தேற்றினான்.

"அப்பு இந்தப் பேய்ப்பொடியன் தனியவே வந்தவன்?". "இல்லை வேற பொடியளும் வந்தவங்கள். அதுகள் வந்த தானே சொன்னதுகள் நாங்கள் போறதுக் கிடையில அவங்கள்...

பற்கள் 'நறநற எனத் தெறித்தன. "என்னப்பு சொல்லுறியள் - அப்ப மற்றப் பொடியளை.." தங்கமணி கதையை முடிக்கவில்லை.

"அவங்கள் என்ரை குடும்பத்தையே அழிக்க நினைக்கிறாங்கள்.. இன்னும் ஒருவன் இருக்கிறான். அவனோட நெருங்கினால் இவங்களும் துலைவீங்கள்.. என்ரை பிள்ளையின்ரை கையிலயும் ஆயுதம் இருக்குது... அவங்களுக்கும் தெரியும்..''

அவர் முகம் இப்போது இறுகிப்போனது கண்கள் சிவந்து வந்தன. அவர் தலை நிமிர்ந்து நின்றார்.

"வாணை அப்பு அம்மாவுக்கு நீதான் ஆறுதல் சொல்ல வேணும்". தங்கமணி அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு போனான்.

சண்முகத்தார் மனைவியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டார். கண்ணீர் வடிந்து காய்ந்து கிடக்கும் சண்முகத்தாரை ஏக்கத்துடன் பார்த்தாள் மனோகரி.

அவள் தன் வலது கைகயைத்தூக்கி சண்முகத்தின் விழிகளில் முத்திட்ட கண்ணீர் துளிகளைத் தட்டிவிட்டாள்.

குரல் கம்மியது. இரண்டு கைகளையும் ஏந்தினாள்.

"ஐயோ என்ரை பிள்ளை... நாளைக்குச் சோதினை எண்டெல்லே சொன்னவன்"

சத்தம் வெளிவராமல் தொண்டைக் குளிக்குள் இறுகிக்கொண்டது. அவளுக்கு மனோகரனின் ஆறுதல் வார்த்தை தேவைப்பட்டது.

அவன் இம்முறை பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்று, பல்கலைக்கழகம் செல்வான், டாக்டராக வருவான் என்ற கனவு கலைந்து போனது.

அவளுக்கு மகன் வந்தால் போதும் என்ற நினைவு தான் நின்று ஆடியது.

அரசியல் வங்குரோத்துத்தனம், பகையுடன் மோத வக்கில்லாதவர்கள் - சிறுவர்களைக் கடத்திக் கொல்லுறது. அரசியல் எண்டு நினைக்கிறாங்கள் இதுதான் ஜனநாயகம், என்று நினைக்கிறாங்கள்.

இனத்தை அழிச்சுப் போட்டு ஆரிலை அதிகாரம் செலுத்தப் போறாங்கள். தமிழன் என்று வாழ முடியாதநிலை.. சீ.. இதென்ன.. அக்கிரமம். இதுக்கா இந்தத் தியாகங்கள் நடந்தேறின.

தங்கமணி எண்ண வலையுள் பின்னப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பா அம்மா என்று எப்பவும் அன்புச் சிறகுள் அடைக்கலமாகிக் கிடக்கும்... என்ரை பிள்ளை நினைக்க நினைக்க சண்முகத்தாருக்கு தலை சுற்றிக்கொண்டு வந்தது.

முந்திக் கொண்டு போனவனை சுட்டுப் போட்டு, முகத்தை எரிச்சுப் போட்டு, மதவுக்கை போட்டவங்கள். இவனையும்...

அதற்கு மேல் அவரால் நினைக்கவும் முடியவில்லை. வந்தவர்களுடன் கூட, பேசுவதற்கு என்ன இருக்கிறது. ஏதோ எல்லாம் ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ராணி அம்மாவை தூக்கி நிமிர்த்தி, தன்னுடன் சார்த்தியபடி ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாள். அவள் சண்முகத்தாரின் சகோதரி மகள். மருமகள் என்ற உறவுக்காரி. சில மாதங்களுக்கு முன் தான் ராணியின் தம்பியும் காணாமல் போனவன். அந்த வலி தீருமுன் இந்த வலி. ஆனாலும் ராணி தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள்.

அவளது வருடல் சுகமாக இருந்தது. வார்த்தைகள் ஆறுதலாக மனக் காயங்களைத் தடவி விட்டது.

மனோகரி தலையை நிமிர்த்தி ராணியைப் பார்த்தாள். ''ராணி'' - அவளை வாரி அணைத்து மார்போடு இறுக்கிக் கொண்டு மீண்டும் தேம்பத் தொடங்கினாள்.

ராணி மனோகரியின் முதுகை வருடிக் கொண்டே ஆறுதல் கூறினாள்.

மனோகரி என்ன நினைத்தாளோ, அழுகையை நிறுத்திக் கொண்டாள். கலைந்து கிடந்த கூந்தலை அள்ளி முடிந்து கொண்டு, சண்முகத்தாரைப் பார்த்தாள். அவர் பேசாமல் இருந்தார்.

அவரின் கோலம் அவளுக்கு மனதை அரித்தது. ராணி எழுந்து சென்றாள் தண்ணீருடன் பற்பொடியும் கொண்டு வந்து கொடுத்தாள். மனோகரி எழுந்து நிமிர்ந்தாள்.

ராணி தேநீர் ஊற்றி வந்தாள். தேநீரை இருவரும் வாங்கிக் கொண்டனர்.

தங்கமணிக்கும் ஒரு கப் கிடைத்தது. மனோகரி தங்கமணியின் காதில்

"மூத்தவனைக் கூட்டிக்கொண்டு... தங்கமணி தலையை ஆட்டினான்.

அவன் வந்து என்ன செய்யலாம்? தங்கமணியின் மனதில் ஒரு கேள்வி இருந்தாலும், அம்மாவின் மன ஆறுதலுக்காக அவன் எழுந்தான். கூடவே சண்முகமும் எழுந்தார்.

தங்கமணி சண்முகத்தைத் தனியாக அழைத்து, அவரிடம் எதை எதையோ எல்லாம் சொன்னான். அவருக்கு அவன் சொன்ன விடயங்கள் எதுவும் ஏற்புடையதாகத் தெரியவில்லை.

"எடேய் தங்கமணி முந்தியும் உப்பிடித்தான் என்ரை பிள்ளையை காணவேணுமெண்டு அலையாத இடம் இல்லை. மனித உரிமைக் குழு, காணாமற்போனவர் சங்கம், பொலிஸ் நிலையம் எல்லாம் ஏறி இறங்கினனான். ஒண்டும் நடக்கயில்லை. பிணத்தைத்தான் கண்டனான். உது வீண் முயற்சி என்று அவர் மறத்துவிட்டார். தங்கமணிக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது.

"இந்த மனுஷன் ஒண்டுக்கும் அசையாது".

அவன் தனக்குள் கூறிக்கொண்டான்.

சண்முகம் ஒரு வித்தியாசமான மனிதன் தான். தானுண்டு, தன் வேலையுண்டு என்று இராமல் - யாருக்கு என்ன உதவி செய்யலாம் என்று அலைந்து திரிபவர். எதிலும் மாற்றம் தேவை என்று நினைப்பவர். அதிகம் படிக்காது விட்டாலும் - ஊர், உலகத்தை நன்கு படித்தவர்.

அவரிடம் இருந்த மனிதப் பற்று பிள்ளைகளுக்கும் இருக்கத்தான் செய்தது. இதுவே அவர்களுக்கு சோதனைக் களமாகவும் மாறி விட்டது.

"தங்கமணி மூத்தவன் வரவாய்ப்பு இருக்குமெண்டு நீ நினைக்கிறியே"

"அப்பு முயற்சி செய்வம். அவன் வந்தாலாவது அம்மாவின்ரை மனம் ஆறுமெல்லே"

"ஓமோம் அது சரிதான்.. இந்தக் கருங்காலிக் காட்டுக்குள்ளை... என்று சண்முகத்தார் இழுத்தார்.

"கவலைப்படாதையுங்கோ காற்றுப் போக முடியாத இடத்திலையும் அவங்கள் போய் வருவாங்கள் என்று தங்கமணி பெருமையாய்ச் சிரித்தான்.

மனோகரி சண்முகத்தாரின் காதில் விழும் படியாகச் சொன்னாள். "நான் இனி அழமாட்டன, வெள்ளை வானிலை ஏத்துறதுக்கு என்னட்டைப் பிள்ளையளும் இல்லை" மூத்தவனை ஆவது...!

சண்முகம் தங்கமணியைப் பார்த்தார்.

"அவள் இனி அழமாட்டாள்''.

"வெள்ளை வானையும் விடமாட்டாள்''.

"நீ போய்வா''

"அவள் காத்திருப்பாள்''

தங்கமணி போய்க் கொண்டிருந்தான்.

## பூமகள் நினைவோடு

ஓ...அந்த நாள் நினைவு
துயரச்சுமை நிறைந்தது
இன்று மனங்களில் பசுமையாய்

தூசு படிந்துபோன அவன் இல்லம்
புலுமச் சிலந்திகளின் வாழ்விடமாகி
எத்தனை வருடங்களின் பின்

பெருமூச்சின் எதிரொலிப்போடு
அவன் கால்கள் அவள் வீட்டுக்குள்
பதிந்தபோது மனதின் குளிர்ச்சி

வீட்டு முகப்பில் பூமாலைகள்
சருகாகிப் போய்க்கிடக்கின்றது
கண்ணாடி உடைந்துப்போய்

படம் மாத்திரம் அழகாய் தெரிகிறது
முற்றத்து மல்லிகை மீது அவள் பார்வை
நீர் கண்டு பலவருடம் காய்ந்துபோய் -
கிடக்கும் பரிதாபம்

நரை விழுந்த அவன் கோலம்
கறைபடிந்த வாழ்வின் காலம்
முடிவின் விழிம்பில் அவன் வாழ்வுப் -
பயணம்

காலத்தின் குரலாய் -
கல்லறைக் காவியமாய் - அவன்
செல்ல மகள் பூமகள் மீது
அழகிய வரிப்புலி உடை போட்ட
படம் மேல்
அவன் அன்பு கலந்தபார்வை

யாரும் அந்த ஜீவனாய்
நடக்கின்றான் பூமகள்
நினைவோடு காலம் கனியும் என்ற
தவிப்போடு

ப.பவித்திரா

# நூலகம்




**நூலின் பெயர்** திருக்குமரன் கவிதைகள் (கவிதைத் தொகுப்பு)
**எழுதியவர்** - திருக்குமரன்
**பக்கம்** - 98
**விலை** - 150/-

திருக்குமரன் கவிதைகள் பற்றிய எனது சில கருத்துக்களை இங்கு முன்வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் தொகுதியை கைப்பிரதியாகவும், அச்சுப் பிரதியாகவும் வாசித்து பிரமிப்படைந்துள்ளேன். சொற்ப நாட்டங்களையே கவிதைகள் என்று இன்றைய தலைமுறையினர் பலர் அடையாளம் காட்டி வருகின்றனர்.

அவற்றிடையே ஆழ்ந்த கவிதைப் பயிற்சியும், இலக்கணத் தேர்வும், கற்பனை வளமும் மிக்க திருக்குமரனின் கவிதைகள் - நமது தமிழுக்குக் கிடைத்த அருஞ் செல்வமாகும்.

இருபத்திமூன்று வயதிலே 'வானம் சிவக்கிறது' என்ற கவிதைத் தொகுதியுடன், ஒரு இளைஞன் தமக்கு அறிமுகமானார். கருத்துத் திறனும், சொல்வளமும், அர்த்தம் நிறைந்த கனவுகளும், அந்தக் கவிதைகளிலே நிறைந்திருந்தன. அதற்கு முன்னுரை எழுதிய தோழர் மு.கார்த்திகேசு - இந்தக் கவிதைகளின் கருத்து வீச்சையும், புதுமையையும், சொல்வளத்தையும் வியந்து பாராட்டினார்.

இளம் தலைமுறையினரிடையே பேசப்பட்ட ஒரு தொகுதியாக அது அமைந்தது. பல தசாப்தங்களுக்குப் பிறகு, அந்தக் கவிஞன் - உலகில் வாழ்கின்ற தமிழினத்தின் நாடுவே ஒரு மந்திரமாக உயர்ந்துள்ளதை நாம் பார்க்க முடிகிறது.

மந்திரம் போல் வலிமை வாய்ந்த அந்தக் கவிதைகளில், யார் தமிழுக்கு தந்து கொண்டு இருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழ் பாடலிலும், நல்லுலகில் இன்று மெய்மையான ஒரு கவிஞனாக உயர்ந்து நிற்கின்ற கவிஞன் புதுவை இரத்தினதுரையே என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள்.

இந்தத் தலைமுறையின் தொடர் வருகையாக, திருக்குமரனை - என்னால் அவர் கவிதைகளில் இருந்து அனுமானம் செய்து கொள்ளமுடிகிறது. களத்தில் நின்று உயிர்ப்போடு கவிதை பாடி வரும் புதுவை இரத்தினதுரையை - அடி ஒற்றிய இலக்கியப் பரம்பரை ஒன்று தோன்றுவது தவிர்க்க முடியாத ஒன்று.

புதுவைக்கு கிடைத்தது போன்ற போர்க்கள வாழ்வு - எல்லோருக்கும் சித்திக்கும் வாய்ப்புக்கிட்டாத போதும், புதுவையின் வழி அவர்களுக்கு நல்ல கவிதைகளுக்கான அடித்தளத்தைக் கொடுத்து வருகின்றது.

கவிஞனுக்கு - வயதை ஒரு முதுர்ச்சியாகக் காட்டும் அறியாமையை, அறிவுள்ள பலரிடமும் இருந்து வருவதை நாங்கள் காணுகின்றோம். இன்னும் பல காலத்துக்கு தமிழை, தமிழ்க்கவிதை மரபை மேன்மையோடு வாழவைத்த மகாகவி பாரதி - முப்பது வயதுகளைத் தொட்டு, வாழ்ந்து முடிந்தவன். பிஞ்சு வயதிலேயே அவன் தன் கவித்துவச் சிறப்பால் தமிழுக்கு புது வெளிச்சம் கொடுத்தவன்.

'பாரதி சின்னப் பயல் என்று' தன்னை கேலி செய்த வயதான புலவர்களைப் பார்த்து - 'பார்... அதி சின்னப்பயல்' என்று தன் சொல் வளத்தால் வாயடைக்கச் செய்தவர் பாரதி. எனவே, கவிஞர்கள் வயது என்பது - அவருடைய கவித்திறனுக்கான ஒரு அடையாளம் அல்ல என்பதை நாம் உலகரீதியாகவே அறிந்து கொள்ள முடியும்.

இருபத்தைந்து வயதான திருக்குமரன் என்ற கவிஞனின் ஆழ்ந்த கவிதைப் பயிற்சி, அவரது முதல் தொகுதியில் தெளிவாகவே வெளிப்பட்டு, தமிழுக்கு ஒரு வளமான கவிதை வளம் கிடைக்கப் போகிறது என்பதை முன்னுரைக்கின்றது.

ஆழ்ந்த இலக்கியப் பயிற்சியும், இலக்கணத் தேர்ச்சியும், கவிதைரசனையும் திருக்குமாரனை ஒரு மெருகுபடுத்தப்பட்ட கவிஞனாக அடையாளம் காட்டுகிறது. திருக்குமரனின் எந்தக் கவிதையையும் சொல் அடுக்கு என்று ஒதுக்கி வைக்க முடியாது. அது நெருப்பாய்க் கொதிக்கிறது, பொங்கு கடலாய் புரளகிறது, குளிர் நீராய் தவழ்கிறது. இநத உணர்வுகளைச் சொல்லும் கவிதைகளில் - சில விடுபாடுகள் இருக்கலாம். ஆனால், அவை பெரிய குறைபாடுகள் அல்ல.

நான் இங்கே இந்தத் தொகுதி முழுவதையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது பொருத்தமாகாது. இந்தக் கவிதைகளை ஒன்றுக்கு இரண்டு முறைபடித்து அனுபவிக்க வேண்டியது வாசகர்களின் பொறுப்பாகும்.

திருக்குமரனின் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வெளிப்பாட்டில் அமைந்திருக்கின்றது என்பதை வாசகர்கள் படிக்கின்ற வேளையில் உணர முடியும். பெரும்பாலான கவிதைகளை வாசித்துக் கொண்டு இருக்கிறபோது, நாம் அந்தச் சூழலுக்குள் போய் விடுறோம். 'காத்திருந்தும் கிட்டாக் கனவு' என்ற கவிதையை முதலில் எடுத்துச் சொல்லலாம்.

இந்தக் கவிதையில் உள்ள ஒவ்வொரு சொல்லும் - நமது நெஞ்சை அள்ளி எடுக்கின்றது. அந்தக் காட்சியை திரும்பத் திரும்ப நம் கண்களிலும், நெஞ்சிலும் இறுக்கமாய் பதியச் செய்கின்றது.

இந்தக் கவிதை தன்னுடைய ஒவ்வொரு சொல்லும் ஆழமான வரலாற்றை இரத்தம் சிந்த பதிவு செய்திருக்கிறது.

இளம் பருவத்தின் ஆழ்ந்த கனவுகளை, வெகு நுட்பமாகச் சொல்லுகின்ற கவிதை - நினைவுகளின் நெரிசல் என்பது ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் வந்து போகின்ற நாட்களை மிக அருமையாக இந்தக் கவிதை சொல்கின்றது.

மனிதனை பிணித்துத் தொடும் உணர்ச்சி மிக்க சொற்சித்திரமாக நினைவுகளின் நெரிசல் என்ற தலைப்பில் உள்ள கவிதையை, ஆழ்ந்து படிக்கும் எவராலும் உணர்ந்து கொள்ள முடியும்.

சின்னச் சின்னக் கவிதையிலேயே ஆழ்ந்த நுணுக்கமான சித்திரத்தை திருக்குமரன் வரைந்து விடுகின்றார். மனதினுள் ஆழ்ந்த சிந்தனையை தோற்றுவிப்பதில் இந்தத் தொகுதியில் உள்ள சிறிய கவிதைகள் இடம் பிடிக்கின்றன.

மனதின் உட்கிடக்கையை - நுட்பமான சித்தரிப்பாக இந்தத் தொகுதியில் பல சிறுகவிதைகள் சொல்கிறன. 'அந்தமில்லா ஆனந்தம்' என்ற தலைப்பில் வரும் கவிதை இதற்கு நல்ல உதாரணம்

சமகால அவலங்கள் பல நெஞ்சைத் தொடும் கவிதைகளாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன. இதற்குச் சிறந்த உதாரணம் - 'இறுதி வேண்டுகோள்' என்ற கவிதை.

கவிதை வரிகளில் விசித்திரமான சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்ததை இரண்டாவது வாசிப்பின் போது அறிந்து வியப்படைய முடிகின்றது.

அந்த இடங்களிலே சங்க இலக்கியங்களில் காணப்படுவது போன்ற நுணுக்கமான சொற்சித்திரங்களையும் கண்டுகொள்ள முடிகின்றது. தன்னுடைய வாழ்வின் சில பக்கங்களையும், வயதின் உணர்வுகளையும் இந்தத் தொகுதியில் திருக்குமரன் எழுதியிருக்கிறார்.

சில இடங்கள் அதீதமானவையாகவும், கேள்விக்குரியனவாகவும் தோன்றிய போதிலும் - கவிதை என்ற அளவில் அவற்றைக் கீழே தள்ளி விட முடியாது.

தன் வயதின் உணர்ச்சிகளை புறநிலையில் நின்று எழுதுவதைப் போலவே, கலந்து நின்று எழுதுவதிலும் கவிஞர்கள் இறங்கிவிடுவதென்பது பரவலாகவே காணப்படும் ஒன்றுதான். திருக்குமரனின் கவிதைகள் - அண்மையில் வெளியான சிறந்த வரவாகக் கொள்ளப்படத்தக்கது.

இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து படித்திருந்தால், இந்தத் தொகுதியில் உள்ள சில கவிதைகளை திருக்குமரன் சேர்க்காமலும் விட்டிருக்கலாம் என்பது மறுப்புக்குரிய ஒன்றல்ல. ஆனாலும், இந்தத் தொகுதி தமிழுக்கு நல்ல வரவு.

கவிதைத் தொகுதி ஆழமாகப் பதிக்கப்பட்டிருக்கிறது என்பது, நேர்த்தியான வடிவமைப்பு என்பதும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

**- செ.யோகநாதன்**

# திருமலையில் கரைதேடும் ஓடம்

உலக மயமாக்கல் என்னும் பெரும் கடலில் - இனவாதம் என்னும் கடற்கொந்தளிப்பின் மத்தியில் பயணிக்கும் எம் தேச மக்களின் வாழ்வு என்னும் ஓடம், 'விடியல்' என்ற



கரையை தொட்டுவிட முனைப்புடன் முனைகிறது.

இந்த ஓடம் - குறித்த கரையைத் தொடவேண்டி, புதுவை அன்பனால் நெறியாளப்பட்டு, விடுதலைப் பறவைகள் என்னும் நாடக அணியால் ஆற்றுகைப்படுத்தப்படும்.



'கரைதேடும் ஓடம்' நாடக நிகழ்வு திருமலை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஆற்றுகைப்படுத்தும் நோக்குடன், கிளிநொச்சியிலிருந்து தனது பயணத்தைத் தொடங்கியிருக்கின்றது.

இந்த நாடகம் பல்லின அரசுக்குள்- இனங்களின் ஐக்கியம் என்பது மகிழ்வான வாழ்வுக்கான அடிப்படை என்ற விடயத்தை ஆழமாகவும், மிகவும் அழகாகவும் வெளிக்கொண்டு வருகிறது.

அத்தோடு, இனங்களுக்கிடையேயான ஐக்கியம் - தன்நலம் கருதும் அரசியல் வாதிகளால் குழப்பப்படுகிறது என்கின்ற சோகமான செய்தியையும் உணர்வேற்றிச் செல்கிறது.

இவ்வாறு தனது ஆரம்பப் பகுதியைத் தொடங்கும் இந்த நாடகம் - பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தன்னகத்தே தாங்கி, சம்பவங்களின் தொகுப்பாக வடிவம் பெறுகிறது.

இதில் முக்கிய விடயமாக வறுமைப்பட்ட குடும்பங்களின் உழைப்பு, சக்தி, போரில் ஈடுபடுகின்றமையையும் - இதனால் அந்தக் குடும்பங்கள் மேலும் வறுமைக்குட்பட்டு, நிர்க்கதியற்றுப் போவதையும் மிகவும் உணர்வுபூர்வமாகக் காட்டிநிற்கும் அதேவேளை, இநதக் குடும்பங்களின் எதிர்கால வாழ்வை - தேச விடுதலைப்போரே பொறுப்பேற்கவேண்டும் என்ற விடயத்தையும் அழுத்திக் கூறுகிறது.

மேலும், எமக்கு ஏற்படுத்தப்பட்ட துயரச் சம்பவங்கள் பலவற்றை மிகவும் உணர்ச்சி வயப்படவைக்கும் விதத்தில் வடிவம் கொண்ட இந்த நாடகம் - உணர்வேற்றலைக் காட்டிலும், உணர்ச்சியேற்றலை அதிகமாக கொண்டுள்ளமை, மனித எழுச்சியை எந்த அளவுக்குப் பேணும் என்பது கேள்விக்குரிய விடயமாக அமைகிறது.

இந்தச் சம்பவங்களால் வளரும் எமது விடுதலைப் போர் சந்தித்த பின்னடைவுகளையும், இதன்போது புலம்பெயர்ந்து அந்நிய நாடுகளில் வாழும் எம்மவரின் உதவிகளால் மீண்டும் போர் வீரியம் பெறுவதையும் காட்டி நிற்கிறது.

இந்த நாடகத்தில் பேசப்படும் முக்கிய விடயமாக - 'வாள் எடுத்தவன் வாளால்தான் மடிவானென்றால்', அதற்கு இன்னொருத்தன் வாள் எடுக்க வேணும் என்கின்ற வசனம் - உள்ளத்தில் ஆழப்படுத்தப்படும் அதேநேரம், இந்த நாடகத்தின் பாடல்கள் அதி விசேட தன்மையைக் கொண்டதாக அமைகிறது.

இவ்வாறு நகர்வுகளைக் கொண்டுள்ள இந்த நாடகம் - தன் முடிவில் இனவாதத்தின் எழுச்சியையும், சிங்கள மக்களின் குறியீடு - அஃது.

சிங்கள மக்கள் அனைவருமே இனவாதத்தின் பக்கம் சார்ந்து விட்டதாக காடடப்படுவது எந்தளவு தூரத்துக்கு உண்மை என்பதை எமது விடுதலைக்கு ஆதரவான நடுநிலமையான சிங்கள சக்திகள் கேள்வியாக்கி நிற்கின்றன.

இந்த விடயத்தில் நாடக ஆசிரியர் நன்றாக ஆராய்ந்திருக்கவேண்டும். ஏனென்றால், 'நாடகம் மனித மனங்களை வெல்லும் பாரிய ஆயுதம்'. நாடகத்தை மக்கள் நம்புகிறார்கள்.

**- ந.நக்கீரன்**

# இன்றுபோய் போர்க்கு நாளை வா

**"கல்வியிற் சிறந்த தமிழ்நாடு - புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு"**

என் காலத்தின் புரட்சிக் கவிஞன் மகாகவி பாரதியால் போற்றப்பட்ட மாபெரும் கவிஞன் கம்பன். கம்பன் வீட்டுக்கட்டில் தறியும் கவிபாடும் என்ற அளவுக்கு, தன் ஆளுமையால் அரசவைக் கவிஞனாக சோழர்காலத்திலே வீற்றிருந்தவன் கம்பன்.

புலவர்கள், கவிஞர்கள் என்கின்ற நிலைகளையும் தாண்டி, கவிச் சக்கரவர்த்தி என்கின்ற சிகரத்தில் தன் கவிதைப் படிக்கற்களால் ஏறி நிற்கும் மங்காப் புகழ்கொண்ட மாபெரும் கவிஞனே கம்பன்.

எதை எந்த இடத்தில் எவ்வாறு வைத்துப் பாடவேண்டும் என்பதைப் பிறப்பிலே கைவரப் பெற்றவன் கம்பன். அவனது கண்ணிற்பட்ட ஒனறு - கருத்திலே எங்கே எவ்வாறு அமைய வேண்டுமோ, அவ்வாறே அமைந்துவிடும். அந்த விடயத்தில் கம்பனுக்கு நிகர் கம்பனே.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பன் - ஒருநாள் வள்ளுவன் என்கின்ற நெஞ்சை அள்ளும் பொய்கையிலே நீராடச் சென்றான். பொய்யாமொழி என்கின்ற உலகப் பொதுமறைப் பொய்கையிலே தன் இலக்கிய வைபத்தைத் தணிக்க, நீராடிய கம்பனது கண்ணிலே பட்டொளி வீசும் முத்தொன்று தென்பட்டது. அந்த முத்தின் ஒளியில் தன்னை இழந்த கம்பன் - அந்த அருமருந்தன்ன குறள் முத்தை தன் உள்ளத்திலே பதிந்துவிட்டான்.

**"பேராண்மை என்பது தறுகண்**
**ஒன்றுற்றக்கால்**
**ஊராண்மை மற்றதன் எஃகு"**

என்பதே கம்பனின் கண்ணிற்பட்ட குறள் முத்து. அதாவது, ஒரு வீரன் போரிலே ஆயிரம் ஆயிரம் தலைகளை வெட்டிச் சரிப்பதே பெரிய வீரம். ஆனால், நினையாப்பிரகாரம் தன் எதிரிக்கு ஒரு துன்பம் வந்துவிட்டால், உடனே அவன் எதிரிக்கு உபகாரியாய் மாறவேண்டும். அதுவே வீரத்தின் சிகரம். இதுவே வள்ளுவன் குறள் முத்தின் பொருள் ஒளி.

வள்ளுவப் பொய்கையின் ஆழத்தில் தேடுவார் அற்றுக் கிடந்த இந்த முத்தைக் கண்ட கம்பன் - மாலையாய் கோர்ப்பதற்குச் சந்தர்ப்பத்தைத் தேடிக்காத்திருந்தான்.

அவன் கவிச்சக்கரவர்த்தியல்லவா? சந்தர்ப்பத்தையே உருவாக்கி விட்டான். என்ன அருமையான சந்தர்ப்பம். இங்கேதான் கம்பன் கவிச்சக்கரவர்த்தியாகின்றான்.

தன் ஆசை நாயகியை, அரக்ககோனிடமிருந்து மீட்பதற்காக தசரதன் மைந்தன் இலங்காபுரிக்கு வருகின்றான். கைலாயகிரியை, கால் நகத்தால் பெயர்த்த தசக்கிரீவன் தானக்கும், தசரதன் மைந்தன் தானக்குமிடையே தளராத போர் நடக்கின்றது.

அன்னம் ஊட்டிய அண்ணனுக்காக அமர்க்களம் சென்று ஆவி துறக்கின்றான் கும்பகர்ணன். தன் தம்பி மாண்டான் என்ற செய்தி கேட்ட இலங்கை வேந்தன் - இடியென களம் புகுகின்றான்.

இராமபிரானது இணையில்லாத சரத்துக்கு முகம் கொடுக்கமுடியாது தவிக்கின்றான் அரக்ககோன். தசரதன் மைந்தன் விடுத்த சரம் ஒன்று, இராவணனது வில்லைத் தட்டிச் செல்கின்றது. கைலாய கிரியைக் கால்களால் பெயர்த்த இராவணன் நிராயுதபாணியாக கால்களால் நிலத்தைக் கிளைந்தவாறு நிற்கின்றான்.

சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்த கம்பனுக்கு கைகூடிவிட்டது. வள்ளுவப் பொய்கையில் தான் எடுத்த முத்தை அழகாக அணிசெய்துவிட்டான். நிராயுதபாணியாக நிற்கின்ற பிறன்மனை நயந்த பேதையாகிய இராவணனைப் பார்த்து - **"இன்று போய் போர்க்கு நாளை வா"** என கோசல நாடுடை வள்ளல் மூலம் கூறுவிக்கின்றான் கம்பன்.

இப்போது வள்ளுவர் கண்ட வீரசிகரம் கம்பன் மூலம் ஒளி வீசுகின்றது. பொன்னாபரணத்தைப் பொற்கொல்லன் உருவாக்கினாலும், அணிபவர்க்கு அணிசெய்வது போன்று - கம்பனையல்லவா அணி செய்துவிட்டது வள்ளுவர் கண்ட வீரசிகரம். எனவே காலம், இடமறிந்து கையாண்ட கம்பன் கவிச்சக்கரவர்த்தியே.

**ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த**
**பூளை யாயின கண்டனை இன்று போய்ப் போர்க்கு**
**நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்**
**வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்.**

**- லெஸ்லி**

## மன்னார் மாவட்டத்தில்

# லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் இலவச கணினிப் பயிற்சி நிலையம் நாளை ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் நகரில் இலவச கணினிப் பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் மற்றும் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் முயற்சியால் நாளை காலை 11.30 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலையம் எனப் பெயரிடப்பட்டு மன்னார் நகரில் ரயில் நிலைய வீதியில் ரெலிக்கொம் அலுவலகத்துக்கு முன்பாக அமைந்துள்ளது.

இந்த பயிற்சிநெறி மன்னார் நகரையும், அதனைச் சூழவுள்ள கிராமங்களை சேர்ந்த வசதி குறைந்த பாடசாலை மாணவர்களுக்கும், இளைஞர் - யுவதிகளுக்கு இலவசமாக, அடிப்படைத்தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்கும் நோக்கில் இந்தப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தை மன்னார் அரச அதிபர் ஏ.விஸ்வலிங்கம் வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளார். இந்த நிலையத்தில் முதற்கட்டமாக 12 கணினிகளைக் கொண்டு இரண்டு, முழுநேர ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படவுள்ளது. இந்த நிலையத்தில் சுமார் 200 வசதி குறைந்த மாணவர்களே முதற் பிரிவில் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

இந்தப் பயிற்சி நிலையம் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி, என 4 இலவச கணினிப் பயிற்சி நிலையங்களின் வரிசையில் 5 ஆவது நிலையமாக மன்னாரில் திறக்கப்படவுள்ளது.

இந்த இலவச பயிற்சி நிலையத்தைத் திறந்து வைப்பதற்கான நிதியை லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயமே வழங்கியுள்ளது. இந்த நிலையத்தை தொடர்ந்து நிர்வகிப்பதற்கான மாதாந்த செலவுகளையும் இந்த நிறுவனமே பொறுப்பேற்றுள்ளது. ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு பயிற்சிநெறிகளை வகுத்து நிர்வகிக்கும் பொறுப்பை தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு ஏற்றுள்ளது.

பேராதனை, மொரட்டுவ பல்கலைக்கழகங்களின் பொறியியற் பீடங்களைச் சேர்ந்த தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு அமைப்பின் தொண்டர்களால் கடந்த வருடத்தில் மன்னாரில் கணினி தகவல் தொழில்நுட்ப விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெற்றது தெரிந்ததே.

தற்போது நிரந்தரமாகத் திறக்கப்படவுள்ள இந்த இலவசப் பயிற்சி நிலையத்தினூடாக மேலும் பல தகவல் தொழில்நுட்ப விருத்தித் திட்டங்களை மன்னார் நகரிலும் அதனை சூழவுள்ள கிராமங்களிலும் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இதற்கான ஆர்வத்தையும், ஒத்துழைப்பையும் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைகள், அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய பொது அமைப்புக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி பயிற்சி நிலையம் இயங்கவுள்ள அதே கட்டடத்தில் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு அமைப்பின் தலைமை அலுவலகமும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த தமிழ் தகவல் தொழில்நுட்ப மையத்தில் வடக்கு - கிழக்கு மலையகப் பிரதேசத்திலும் ஆரம்பித்துள்ள கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையத் செயற்றிட்டத்தின் கீழ் திறந்து வைக்கப்படவுள்ளது. இது 15 ஆவது நிலையமாக இந்தப் பிரதேசத்தில் அமையவுள்ளது.

பல்வேறு வகையான உதவிகளை வழங்கிவரும் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்- பல சிறுவர் இல்லங்கள், சுயதொழில் பயிற்சி நிலையங்கள் என வேறும் பல சமூக நலன்புரித் திட்டங்களுக்கும் உதவி வருகின்றது.




# தட்டுவன்கொட்டி கிராமத்தில் 110 வீடுகள் அமைக்கப்படுகின்றன!

(கிளிநொச்சி)

ஆனையிறவுக்கு அண்மையில் தட்டுவன் கொட்டி கிராமத்தில் ஜி.ரி. இசற் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 110 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீடுகள் ஒவ்வொன்றும் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்டவை. ஒரு மாதத்துக்குள் வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டு விடும் எனத் தெரியவருகிறது.

ஆனையிறவுப் போர் நடவடிக்கை காரணமாக 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, இந்தக் கிராம மக்கள் வன்னியில் வசித்து வருகின்றனர். ஆனையிறவு இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதிக்கு அண்மையில் இந்தக் கிராமம் அமைந்துள்ளதால், இராணுவ நடவடிக்கையின் போது வீடுகள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டு அந்தப்பிரதேசம சுடுகாடுபோல் காட்சியளித்தது.

ஆனையிறவு முகாமை விடுதலைப்புலிகள் கைப்பற்றிய பின்னரே, இந்தக் கிராமத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு, ஒரு மாதிரி கிராமமாகக் காணப்படுகின்றது. (122)

# பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு கிளிநொச்சியில் மாபெரும் கண்காட்சி

(கிளிநொச்சி)

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் படைத்துவரும் சாதனைகளை எடுத்துக்காட்டும் மாபெரும் கண்காட்சி ஒன்றை கிளிநொச்சியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதில் பகுதி பகுதியாக தாயக விடுதலைப் போராட்டத்தை சித்தரிக்கும் ஒளிப்படங்களின் காட்சி அமையவுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பயன்படுத்தப்படும் போராயுதங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

போராட்டத்தில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட வரலாறுகள் குறிப்பிடப்பட்டிருக்கும் எனவும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களும் இந்தக் காட்சியில் இடம்பெறும் எனவும் தெரியவருகிறது.

அத்துடன், விடுதலைப் போராட்டத்தில் போராளிகளால் உருவாக்கப்பட்ட பசீலன் பீரங்கி, உள்ளிட்ட போராயுதங்களும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

மேலும், குறிபார்த்து துப்பாக்கியால் சுடும் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெறுவோர்க்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

மாதிரி படைமுகாம்களையும், மாதிரி மருத்துவமனையையும் காட்சிப்படுத்தப்படவுள்ளது. மேலும் கடற்புலிகளின் மாதிரி கடற்கலங்களின் இறங்குதளமும் இந்தக்கண் காட்சியில் வைக்கப்படவிருப்பதாக தெரியவருகிறது.

## அனிஞ்சயன்குளம்

# தமிழ்க்கலவன் பாடசாலை கூரை வேயப்படாத நிலையில்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அனிஞ்சயன் குளம் தமிழ்க் கலவன் பாடசாலை வளப்பற்றாக்குறையுடன் இயங்கிவருவதால், மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நிரந்தரக் கட்டடத்தில் இயங்காத இந்தப்பாடசாலை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டில்களிலே இயங்கி வருகின்றது. இந்த தற்காலிக கொட்டில்கள் இதுவரையில் வேயப்படவில்லை. இதனால் மாணவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

சம்மந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்தில்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என பெற்றோர்கள் விசனம் தெரிவித்தனர்.

## மன்னார் பேசாலைப் பகுதியில்

# கடத்தி செல்லப்பட்ட சிறுமி பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மன்னார்)

மயக்கமருந்து கொடுக்கப்பட்டு கடத்திச் செல்பட்ட 14 வயதுச் சிறுமி, இளைஞன் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

பேசாலைக் காட்டு வைத்திய சாலைக்கு சமீபமாக சென்றுகொண்டிருந்த இந்தச் சிறுமியை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் கடத்திச் சென்று நானாட்டானில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுமியின் பெற்றோர் பேசாலையிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில் முறையிட்டதையடுத்து, சிறுமியை விடுதலைப் புலிகள் நானாட்டான் பகுதியில் இருந்து மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

சம்வத்துடன் தொடர்புடைய இளைஞன் தலைமறைவாகியுள்ளதாக தெரியவருகிறது. (201)

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு விரைவில் மின்சார விநியோகம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு மிகவிரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பிரதேசத்துக்கு கடந்த காலங்களில் இரண்டு பாரிய மின்பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டு அவற்றின் மூலம் பெரும்பாலான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே,

இந்த இரண்டு பிறப்பாக்கிகளை கொண்டு ஏனைய இடங்களுக்கும் பூரணமாக மின்சாரம் வழங்கப்பட முடியாதுள்ளமை தொடர்பாக மின்சாரசபை சுட்டிக்காட்டியதை அடுத்து மேலும் ஒரு மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டு, மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மின்சாரசபையால் மேற்கொள்ளப்பட இருப்பதால் மிக விரைவில் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடிகள் உட்பட கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு விடும் என மின்சாரசபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# நாடாளுமன்றம் சென்று குரல் கொடுக்கக்கூடிய அளவுக்கு எமது போராட்டம் வளர்ந்திருக்கிறது

## - வட்டக்கச்சிப் பொறுப்பாளர் சோழநிலவன் தெரிவிப்பு

தமிழ் மக்களின் விடுதலை வெகு தூரத்தில் இல்லை. திலீபன் வைத்த இலட்சிய உறுதியோடுதான் இந்த சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நாம் இன்று பெரிய இராணுவ பலத்தோடு அரசியல் ரீதியாகவும் வளர்ந்து நிற்பதற்கு மாவீரர்களின் தியாகம் தான் காரணம்.

இன்று தமிழ் மக்களுக்காக நாடாளுமன்றம் சென்று குரல் கொடுக்கக் கூடிய அளவுக்கு எமது போராட்டம் வளர்ந்திருக்கின்றது என - வட்டக்கச்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் தெரிவித்தார்.

வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் தியாக தீபம் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகளும், அடையாள உண்ணா நோன்பும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே வட்டக்கச்சி பிரதேசப் பொறுப்பாளர் சோழநிலவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாம் தியாகி திலீபனின் 17 ஆம் ஆண்டு 10 ஆம் நாள் நினைவு நாளை நினைவுகூரும் முகமாக இந்த இடத்திலே கூடியிருக்கின்றோம். 17 ஆண்டுகளுக்கு முன் தேசப்பற்றோடும், தேசவிடுதலைக்காகவும் தன்னை ஆகுதியாக்கிய வர்மறவனின் நினைவு நாளில் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டிருக்கின்றோம்.

சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு மாறி மாறி ஆட்சிபீடமேறிய ஆட்சியாளர்கள் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படவேண்டுமென்ற ஆதிக்கவெறி இருந்தது. எமது தமிழ்த் தலைவர்கள் அன்று தமிழ் மக்களுக்கான உரிமையைத் தருமாறு சிங்கள ஆட்சியாளர்களிடம் கேட்டார்கள்.

ஆனால், இலங்கை அரசோ பொருட்படுத்தாது சிங்கள ஆதிக்கத்தின் வெறியால் தமிழர்கள் மீது சொல்லொண்ணாக் கொடுமைகளைச் செய்தனர்.

தமிழ் தேசத்தின் அந்த நேரத்திலே சில தமிழ்த் தலைவர்கள் தங்களின் சுயநலத்துக்காக அரசாங்கத்தின் காலடியில் விழுந்தனர். அப்பொழுதுதான் தமிழர்கள் மீதான கொடுமைகள் அதிகரித்தன. அந்த நேரத்தில் தமிழ்த் தலைவர்களால் சாத்வீகப்போராட்டம் நடத்தப்பட்டன.

இந்தப் போராட்டங்கள் தோல்வியிலேயே முடிவடைந்ததால் எமது போராட்டம் தேசியத் தலைவரினால் ஆரம்பிக்கப்பட்டது. விடுதலைப் போராட்டம் சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம். இன்று பெரியதோர் இராணுவ பலத்தோடும் எமது போராட்டம் உயர்ந்து நிற்கின்றது.

இலட்சிய உறுதியில் யாழ். மாவட்டத்திலே அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் அந்தக் காலப் பகுதியிலே விடுதலையை, இந்த மண்ணை, நேசித்த வீரன். மண்ணிலே காலடி எடுத்து வைத்த பெரியதோர் இலட்சிய நோக்கோடு தேசியத் தலைவரின்கீழ் இருக்கின்ற மக்கள் சுதந்திரமாக இந்த மண்ணிலே வாழவேண்டும் என்ற நோக்கோடு, அவர் இந்த உண்ணா நோன்பை ஆரம்பித்து, இந்தத் தேசத்தின் விடுதலைக்காகத் தன்னை ஆகுதியாக்கினார். ஆகுதியாக்கிய அந்த வீரனின் 17 ஆண்டுகள் கடந்து இன்று அந்த நினைவுநாளை நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களின் விடுதலை வெகு தூரத்தில் இல்லை. திலீபன் வைத்த இலட்சிய உறுதியோடு தான் இந்த சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாம் இன்று பெரிய இராணுவ பலத்தோடும், அரசியல் ரீதியாகவும் வளர்ந்து நிற்பதற்கு மாவீரர்களின் தியாகம்தான் காரணம்.

இன்று தமிழ் மக்களுக்காக நாடாளுமன்றம் சென்று குரல் கொடுக்கக்கூடிய அளவுக்கு எமது போராட்டம் வளர்ந்திருக்கின்றது.

இந்த வளர்ச்சியோடு எமது தேசியத் தலைவரின் காலத்திலே திலீபனின் நினைவு நாளிலே எமது இளஞ் சந்ததிகள் நாளை நிம்மதியாக வாழவேண்டும் என்றும், திலீபனின் நினைவு நாளைக் காலங் காலமாகத் தமது மனங்களில் வைத்துப் பூசிக்க வேணடும் என்றும் எமது தேசியத் தலைவரின் காலத்திலே எழது உரிமையை வென்றெடுத்துத் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (09)

# பால் கொள்வனவு நிறுத்தப்பட்டது

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கற்சிலை மடுவில் இயங்கி வந்த கால்நடை அபிவிருத்திச் சங்கம் பால் கொள்வனவை இடைநிறுத்தியுள்ளது.

மக்களிடமிருந்த கொள்வனவு செய்யப்பட்ட பணம் வழங்க முடியாத நிலையிலேயே, பால் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்*
*சுற்றமாச் சூழ்ந்து விடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## திலீப நாளும்... இந்திய நினைவுகளும்...

நேற்றைய தினம் திலீபன் நாள் - தமிழர் பிரதேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்ட அதேவேளை, அந்தத் தியாகியின் இலட்சிய தாகம் இன்னமும் தணிவிக்கப் படவில்லை என்ற செய்தியும் தமிழர் தம் நெஞ்சங்களில் மிகவும் ஆழமாக உணர்த்தப்படவே செய்தது.

அகண்ட பாரதத்தின் ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழர் தாயகப் பகுதியை விட்டு வெளியேற்றப்பட்டு 14 வருடங்கள் ஆகிவிட்ட நிலையிலும், இலங்கை இராணுவத்தின் பிடிக்குள் இருந்து இன்னமும் இந்தப் பகுதிகள் முற்றாக விடுவிக்கப்படாத நிலையில் திலீபனின் தாகம் தீர்க்கப்படாததாகவே இருக் கிறது.

இனவிடுதலை, தேசவிடுதலை, இரண்டையும் இலக்காக வைத்து தமிழர்கள் நடத்திவரும் விடுதலைப் போரட்டத்தின் பல தசாப்த கால வரலாற்றில் திலீபன் ஏற்படுத்திய திருப்புமுனை சரித்திர முக்கியதுவம் வாய்ந்த ஒன்றாகும். இலங்கையின் பேரினவாத ஆட்சியினர் எந்தக் காலத்திலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமானதும், உறுதியானதுமான அரசியல் தீர்வை வைக்கமாட்டார்கள் என்பதில் தெளிவான நிலைப் பாட்டைக் கொண்ட தமிழ் மக்களுக்கு, அயல் நாடான பாரத தேசமும் உதவப் போவது கிடையாது என்பதையும், உணர்ந்த திலீபன் தன்னைத் தானே தியாகம் செய்ய வேண்டிய தீர்வுக்கு வந்திராவிட்டால் இந்தியமாயை எங்களை விட்டு இன்றும் அகன்றிருக்காது. நாம் ஆகாசவாணியை அண்ணாந்து பார்த்துக் கேட்டும், தூர்தர்ஷனுக்குள் ஊடுரு ப்பார்த்தும் எமது பிரச்சினைக்கான தீர்வுகள் இந்தியா விடமிருந்து கிடைக்கும் என்றே நம்பிக் கொண்டிருந்திருப்போம்.

ஆனால், திலீபன் தனி ஒருவனாகவே - தன்னை அர்ப்பணிப் பதன் மூலமே - எமது இந்தியக் கனவினை தவிடு பொடியாக்கி, நாங்கள் நாங்களாகவே போராடித்தான் நமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற வரலாற்றுப் பாடத்தை எமக்கு ஆழமாக உணர்த்தி மறைந்து பதினேழு ஆண்டுகள் ஓடிவிட்டது.

அறுநூற்றி ஐம்பது மாவீரர்களுடன் தானும் ஒன்றாக இருந்து தமிழீழம் மலர்வதை பார்த்துப் புன்னகைப்பேன் என்று கூறி சென்றவன் இன்று பதினேழாயிரத்துக்கும் அதிகமான மாவீரர்களுடன் அந்த மகத்தான நாளுக்காக காத்திருக் கிறான்... அதே தாகம் தணியாத... சுதந்திர தாகம் தணியாத நிலையில் விடியல் நாளுக்காக காத்திருக்கிறான் என்ற உயிரீர்க்கும் செய்தியை நேற்றையநாள் நிகழ்வுகள் எமக்கு உணர்த்திநிற்கின்றது என்பதே முக்கியமான விடய மாகும்.

இந்தப் பதினேழு ஆண்டுகளில் அவனது விடுதலைக் கனவை நனவாக்க பதினேளாயிரம்மாவீரர்கள் அவனது சுவடுகளில் விடுதலைத் தாகத்தோடு பாதம் பதித்து சென்றுள்ளார்கள் என்ற செய்தி விண்ணகத்தில் இருந்து தாயக விடுதலைநாளுக்காக காத்திருக்கும் திலீபனுக்கு உறுதியையும் நம்பிக்கையையும் தரும் ஒன்றாகவே இருக்கும்.

இந்தியப்படை போய்விட்டது, ஆனால் இன்னமும் காந்திய தேசம் தனது மேலாதிக்க சிந்தனையில் இருந்து விடுபடவில்லை.

அண்மையில் தென்னிந்திய சஞ்சிகையான குமுதத்திற்கு வழங்கிய செவ்வியொன்றில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதனை தெளிவாகச் சுட்டிக்காட்டி யிருந்தார். அதாவது 'பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் பிரச்சினை களையும் புரிந்து கொண்டு தனது நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ள இந்தியா முன்வரவேண்டும்' என அவர் அந்தச் செவ்வியில் கூறியிருந் தமையானது - இந்தியா பதினேழு ஆண்டுகளின் முன்னிருந்த நிலையிலேயே இன்னமும் இலங்கை விவகாரங்களில் தவறான கருத்து நிலைப்பட்டைக் கொண்டிருக்கிறது என்பதை உறுதிசெய்வதாக உள்ளது.

இந்தியாவை ஈழத்தமிழர்கள் எவ்வாறு நம்பினார்கள் - இந்தியாவிடமிருந்து எத்தகைய பாதுகாப்பை எதிர்பார்த்தார்கள என்பதையெல்லாம் விபரிக்க வேண்டிய அவசியமேயில்லை.

இந்தியா மீதான அளப்பரிய நம்பிக்கையுடன்தான் திலீபன் தனது உண்ணா நோன்பு போராட்டத்தை அரம்பித்தான். ஆனால், இந்தியாவின் நம்பிக்கைத் துரோகம் திலீபனை நாம் இழக்கவைத்ததுடன், இந்தியாவையும் வரலாற்று அவமானங்களை சுமக்கவைத்தது.

ஆனால், இந்தியாவை இன்னமும் நேசசக்தியாகப்பார்க்கவே தமிழ் மக்கள் விரும்புகின்றனர் என்றால் அதில் மிகையில்லை. இது இந்தியா - ஈழத்தமிழர்கள் இரு சாராரினதும் எதிர்கால நலன்களுக்கு மிக அவசியமான உறவாக இருக்கவேண்டியது தவிர்க்கமுடியாததாகும். ஆனால் இந்தியா அதனை உணர்ந்து கொள்ள அதன் வரட்டுகௌரவம் தடுகின்றது என்றே கூறவேண்டும்.

இந்த வரட்டுக் கௌரவம் இனிமேலும் பல வரலாற்றுத் தவறுகளை இழைக்கக் காரணமாகிவிடக்கூடாது என்பதே நமது கவலையாகும். நேற்றைய திலீபன் நாளில் திலீபனுடன் இந்தியாவையும் இணைத்து நினைக்கவேண்டிய சூழல் தவிர்க்கமுடியாத ஒன்றான போது, மேற்படி கருத்துக்கள் மனதில் எழுந்ததும் தவிர்க்க முடியாததாகவே இருந்தது.

## நாடும் நடப்பும்




### தேசிய மரநடுகை மாதத்தில்

## மூன்று இலட்சம் பயன்தரு மரங்களை வட - கிழக்கில் நடுகைசெய்யத் திட்டம்

தேசிய மரநடுகைதினமாக அடுத்தமாதம் 15 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, எதிர்வரும் மாதத்தை தேசிய மரநடுகை மாதமாகக் கொண்டாடவும், அந்தக் காலப் பகுதியில் வடக்கு - கிழக்கில் 3 லட்சம் பயன்தரு மரங்களை நடுகை செய்வதோடு நாடுமுழுவதிலும் 10 லட்சம் பயன்தரு மரங்களை நடுகைசெய்யவும் திட்டமிட்டிருப்பதாக சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான பிரசார முன்னெடுப்புக்களில் - சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு தென்பகுதியில் ஈடுபட்டுவருகிறது. இந்தத் திட்டம் பற்றி கடந்த வாரம் இறுதி யில் யாழ்.மாவட்டத்தில் வன பதிவாளர் திணைக்களத்திடம் தொடர்புகொண்டபோது இதுவரை இந்த திட்டம் பற்றிய அறி வித்தல் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை எனவும், ஒருசில மரக்கன்றுகளே இந்த வருடத்தில் விநியோகிக்க தயாராக தம்மிடம் இருப்பதாகவும், குறிப்பிட்டனர்.

தென்னை அபிவிருத்திச்சபையினது பிராந்திய முகாமையா ளரிடம் தொடர்புகொண்டபோது, தமது தலைமை அலுவலகத் தில் இருந்து கிளிநொச்சி மாவட்ட நாற்றுப் பண்ணையில் 10 ஆயிரம் தென்னை நாற்றுக்களை ஒதுக்கி வைத்திருக்கு மாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும், யாழ்.மாவட்டத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள். சுற்றாடல் துறையினர், பொலி ஸார் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை இணைத்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படினும், இது பற்றிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் யாழ். மாவட்டத்தில் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் ஆதங்கப்படுகின்றனர். கடந்த இருபது வருடப் போரில் யாழ்.மாவட்டத்தில் லட்சக்கணக்கில் மரங்கள் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (31)

## உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி விவசாய நிலங்களை பண்படுத்த அனுமதி

தென்மராட்சியின் - சாவகச்சேரிப் பகுதியில் உள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களிலுள்ள விவசாய நிலங்களில் உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி வருவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

தென்மராட்சியை இராணுவத்தினர் கைப்பற்றிய பின்னர் சாவகச்சேரி - மறவன்புலவு, சின்ன நுணாவில் ஆகிய பகுதிக ளில் விவசாயம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதிகளில் விவசாயம் செய்வதற்கு படையினரால் அனுமதிக்கப்பட்டபோதும் உழவு இயந்திரங்ளைக்கொண்டு செல்வதற்கு தடைவிதிக்கப் பட்டிருந்தது.

எனினும் கடந்தவாரம் நுணாவில் வைரவர் கோவிலடியில் படை உயர் அதிகாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் பின்னர் இந்த இடங்களில் உழவுஇயந்திரங் களை எடுத்துச்சென்று விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத் துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (29)

## கரவெட்டி பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கிய வேலைகளை வருட இறுதிக்குள் பூர்த்திசெய்க

### பிரதேச செயலர் பணிப்பு

கரவெட்டி பிரதேசத்தின் அபிவிருத்திக்காக இந்த வருடத் திற்கென ஒதுக்கப்பட்ட நிதிக்கான வேலைத்திட்டங்களை வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யுமாறு பிரதேச செயலர் எஸ்.சத்திய சீலன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

கரவெட்டி பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டம் அண்மை யில் நடைபெற்றபோது, இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியவேளையே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - பிரதேசத்தின் அபிவிருத் திக்கென ஒதுக்கப்படுகின்ற நிதி உரிய முறையில் பயன்படுத் தப்படவேண்டும். உரிய காலத்தில் நிதி ஒதுக்கப்படாவிட்டால் அவை திரும்பிப்போகும் நிலை ஏற்படும். இதற்கு ஒருபோதும் இடமளிக்ககூடாது. இதற்கு சம்மந்தப்பட்ட அனைவரும் ஒத்து ழைப்பு வழங்கவேண்டும்.

அபிவிருத்திப் பணிகளுக்கு இடையூறு விளைவிப்போரை சட்டத்தின் முன் நிறுத்த கிராம அலுவலர்களும், பொலிஸ் அதிகாரிகளும் ஒத்துழைக்கவேண்டும்.

பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக நடைபெறும் ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பதிலளிக்ககூடிய வகையில் கூட் டத்துக்கு வருகைதரவேண்டும் எனவும் தெரிவித்தார். (13)

## கலைப்பேரரசு விருது மெற்றாஸ் மெயிலுக்கு

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த விருதினை பாரம்பாரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளர்- கலாபூசணம் செல்லையா மெற்றாஸ் மெயிலுக்கு வழங்கு வதற்கு தீர்மானித்துள்ளது.

கலைப்பேரரசு ஏ.ரி:பொன்னுத்துரையின் ஞாபகார்த்தக்குழு கடந்தவாரம் கூடியபோது இந்த முடிவை எடுத்துள்ளது.

இவருக்கான விருதினை இந்த வருடம் நடைபெறவுள்ள ஞாபகார்த்த நிகழ்வில் வைத்து வழங்குவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## சேதுசமுத்திரத் திட்டம் குறித்து யாழ்.பல்கலையில் கருத்தரங்கு

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் அனுசரணையு டன் யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞான படிப்பு வட்டம்"சேது சமுத்திரத்திட்டமும், இலங்கை மீதான அதன் தாக்கங்களும்" எனும் விடயத்தின் கீழ் கருத்தரங்கு ஒன்று நாளை காலை 9 மணிக்கு யாழ்பல்கலைக்கழக பொருளியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறையின் சிரேஷ்ட விரிவு ரையாளர் கலாநிதி ஏ.சூசைஆனந்தன் பிரதான கருத்து ரையை நிகழ்த்தவுள்ளார். கருத்தரங்குக்கு அரசறிவியற்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் தலைமைதாங்கி கலந்து ரையாடலை வழிநடத்துவார்.

சமூக விஞ்ஞான மாணவர்களும், சமூகவிஞ்ஞானத்துறை சார்ந்த ஆர்வலர்களும் பத்திரிகையாளர்களும் சமூகம் தந்து கலந்துரையாடலிலும் பங்காற்றி பயன்பெறுமாறு சமூக விஞ்ஞான படிப்பு வட்டச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச அரசியல் ...

- பரணி

# கொபி அனானின் குற்றச் சாட்டுக்களும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலும்

ஐக்கிய அமெரிக்க நாட்டில் குடியரசுத் தலைவர் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இன்றைய குடியரசுத் தலைவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுகின்றார். தனது நாட்டை எவருமே நெருங்க முடியாது என்ற திமிரில் அமெரிக்கா இருந்தது. அந்த எண்ணத்தை நெருங்கச் செய்தது. செப்ரெம்பர் பதினொன்றுத் தாக்குதலாகும். உலகத்தின் உயர்ந்த கட்டடமான உலக வணிக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் புகைமண்டலமாகி இடிந்து நொருங்கியமை ஒருபுறம். அங்கே பணிபுரிந்த 3000 பேர் வரையிலான அப்பாவி மக்கள் இறந்தது பெரியதோர் அவலம் மறுபுறம். ஆனால், எவருமே நினைத்துப் பார்க்க முடியாது, மிகவும் வலிமையுள்ள நாட்டின் அச்சாணியாகத் திகழ்ந்த "பென்டகனையே" விமானங்கள் தாக்கியதை அமெரிக்காவால் சீரணிக்க முடியவில்லை. இதன் விளைவு தான் ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பும், ஆக்கிரமிப்புமாகும். இந்தப் படையெடுப்பை அமெரிக்க மக்கள் எதிர்க்கவில்லை. ஏனெனில் ஒசாமா பின்லேடனின் தாக்குதலால் அப்பாவி மக்கள் அநியாயமாக உயிரிழந்ததை அமெரிக்கா ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் இருந்தமையேயாகும்.

ஆனால், ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்புக்குப் பின்பு ஈராக்கில் தன் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தும், அதற்காகக் கூறிய காரணங்களையும் உலகம் ஏற்கத் தயாராக இருக்கவில்லை. அமெரிக்காவும், பிரித்தானியாவும் இந்தப் போரை நியாயப்படுத்த எடுத்துக்காட்டிய காரணங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாக மட்டுமல்ல நிரூபிக்க முடியாதவையாகவும் இன்றுவரை உள்ளன. ஈராக்கின் மேல் போர் தொடுப்பதற்காகப் பல்வேறு வடிவில் பல தீர்மானங்களை ஐ.நாவில் முன்மொழிந்தது அமெரிக்கா. ஆனால், ஐ.நா பாதுகாப்புச் சபையில் பிரான்சு, ஜேர்மனி, சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் அமெரிக்காவின் தீர்மான நகல்களை எதிர்த்து வந்தன. பின்னர் சமரசத் தீர்வுகள் எட்டப்பட்டு ஈராக்கைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் நிறைவேறியதை அடிப்படையாக வைத்து அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஈராக்மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடங்கி, சதாம் ஹீசேனை அகற்றினர். தமக்கு ஏற்ற வரை ஆட்சியில் இருத்தினர். ஏனென்றால் வளத்தை உறிஞ்சலாம். என எண்ணினர்.

ஆனால், நிலைமை மாறிவிட்டது. அமெரிக்காவின் உண்மை உருவத்தை ஈராக்கிய மக்கள் தற்பொழுது உணர்ந்துவிட்டனர். அமெரிக்காவையும், அதன் நேச அணிகளையும் வெளியேற்றுவதற்கான போராட்டங்கள் பல்வேறு தரப்பினராலும் தொடங்கப்பட்டுள்ளன. ஈராக்கின் மீது போர்தொடுத்து சதாம் ஹீசேனை அகற்றிய காலப்பகுதியில் இறந்த அமெரிக்க இராணுவத்தினர் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. ஆனால், ஈராக்கின் யுத்தம் முடிவடைந்து விட்டதாக அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அறிவித்தபின்பு இறந்த அமெரிக்க இராணுவத்தினரின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துவிட்டது.





ஈராக்மீது போர் தொடங்கிய பொழுது அமெரிக்க நகரங்களில் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஆனால் அந்த ஆர்ப்பாட்டங்களை அமெரிக்க அரசு தந்திரோபாயமாகச் சிறிதாகக் காட்டித் தனது பக்கத்தை நியாயப்படுத்திக் காட்டியது. ஆனால், இன்று அமெரிக்க இராணுவத்தினர் இறப்பது ஈராக்கில் அதிகரித்துக்கொண்டு செல்வதும், பேரழிவு ஆயுதங்களோ, ஆபத்தான உயிரியல் ஆயுதங்களோ, ஈராக்கில் இல்லை என்பது உறுதியாகத் தெரியவந்துள்ளதும், இராணுவப் புலனாய்வு அறிக்கைகளின் உண்மையை மூடிமறைத்துத் தவறான தகவல்களை மக்கள் முன்வைத்துப் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக அரசு பரப்புரை செய்தது. தவறென அரசு விசாரணைக்குழுவே அறிக்கை தெரிவித்தும் போருக்கெதிரான எண்ணத்தை அமெரிக்க மக்களிடையே அதிகரித்துச் செய்துள்ளது. இதனால் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காக பல்லாயிரம் அமெரிக்க மக்கள் நியூயோர்க் நகரில் திரண்டதன் மூலம் யாவரும் உண்மையை அறியக் கூடியதாக இருந்தது. குடியரசுக் கட்சி மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்த மாநாட்டு மண்டபத்துக்கு முன்னால் ஜோர்ஜ் டபிள்யு. புஷ்ஷிற்கு எதிராகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடந்தது. அதாவது அமெரிக்க மக்கள் யுத்தம் நடைபெறுவதை ஏற்கிறார்களோ, இல்லையோ தமது இராணுவததினர் இறப்பதை விரும்பமாட்டார்கள். அதனால்தான் இவ்வாறு ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். தமது எதிர்ப்பை அரசுக்குக் காட்டுகின்றனர்.

இதேநேரம் ஈராக்கில் அமெரிக்காவின் நோகத்துக்கு எதிரான போராட்ட வழிமுறைகள் பல்வேறு வடிவங்களில் நடைபெறுகின்றன. ஈராக்கை ஆக்கிரமித்து அங்கு ஒரு பொம்மை ஆட்சியமைத்து, ஈராக்கின் எண்ணெய் வளத்தை உறிஞ்ச அமெரிக்கா எடுத்த முயற்சிகளுக்குத் தடைகள் ஏற்படும் அபாயம் வந்துள்ளது. ஈராக்கின் அபவிருத்தி என்ற பணியில் தனக்கு ஆதரவான நாடுகளின் இராணுவ உதவிகளுடன் தனது ஆதரவான வெளிநாட்டு நிறுவனங்களையும் ஈராக்கில் நிலை நிறுத்தி தனது இருப்பை நிலைநிறுத்த அமெரிக்கா முயன்று வருகின்றது. ஆனால், ஈராக்கின் நிலைமை அமெரிக்காவுக்கு எதிராக வளர்ந்து கொண்டு வருகின்றது.

அமெரிக்காவின் இந்தத் திட்டத்தினால் வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரியும் உள்நாட்டவர், வெளிநாட்டவர் யாவரும் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் அன்றாட நடப்புகளாகிவிட்டன. சில நாடுகள் இதனை விளங்கிக் கொண்டு தமது இராணுவத்தை ஈராக்கிலிருந்து விலக்கிக் கொண்டுள்ளன. சில நிறுவனங்கள் தமது கதவுகளை மூடி வெளியேறி வருகின்றன.

அமெரிக்கா வெளியேறினால் போதும் என்ற ஈராக்கிய மக்களின் நிலைப்பாடு தெளிவாகத் தெரிகின்றது. சன்னி முஸ்லிம்களும் சரி, ஷியா முஸ்லிம்களும் சரி அமெரிக்காவின் வெளியேற்றத்தையே விரும்புகின்றனர். ஆனால் அமெரிக்காவோ இரண்டும் கெட்டான் நிலையிலுள்ளது. ஈராக்கை விட்டு வெளியேறவும் முடியாத நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிரான குழுக்களைப் பயங்கரவாதிகளாகக் காட்டுவதும், அவர்களுக்கெதிராக இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் குண்டுகளை வீசுவதும் பீரங்கித் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களை நடத்துவதும் நாளும் நடக்கும் நிகழ்ச்சிகளாகிவிட்டன. குண்டுவீச்சிலும், இராணுவ நடவடிக்கைகளிலும் இருந்துகொல்லப்படும் அப்பாவிப் பொது மக்கள் பயங்கரவாதிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டு -ன.

இது இங்கே பாடசாலைகள் தேவாலயங்கள், கோவில்களில் குண்டு வீசி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்துவிட்டுப் புலிப்பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக சிங்கள அரசு அறிவித்தமை நினைவுக்கு வருகின்றது. எப்பொழுதும், எங்கும் ஆக்கிரமிப்பாளர்கள் இவ்வாறுதான் பரப்புரை செய்வார்கள் என்பதுதான் உண்மையாகும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று கூறிக்கொண்டு முதலில் ஆப்கானிஸ்தானில் கால் வைத்தது. அமெரிக்கா அடுத்து ஈராககில் கால் வைத்தது. இது முடிந்தபின் சிரியா, லிபியா, ஈரான் என்று காலைப் பதிக்க நினைத்த அமெரிக்காவுக்கு ஈராக்கிலிருந்து காலை எடுக்கவும் முடியாத, ஊன்றவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் அமெரிக்க அரசின் நிலைப்பாட்டுக்கு எதிராக அமெரிக்க மக்கள் திரண்டு வருகின்றனர். இந்த வேளையில் தான், ஐக்கிய நாடுகளின் செயலாளர்நாயகம் கொபி அனான் அமெரிக்காவின் ஈராக் மீதான போர் சட்ட விரோதமானது என்று வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

வெள்ளை மாளிகை இதனை மறுத்துக் கூறியுள்ளது. கொலின் பவல் இக்கூற்றை மறுத்து அறிக்கை விட்டுள்ளார். ஆனால், மீண்டும் மீண்டும் கொபி அனான் சட்டவிரோதமான நடவடிக்கையே என்று உறுதிபடக் கூறுகின்றார். கொபி அனான் காலம் கடந்து இவ்வாறு கூறியிருந்தாலும் கூட, மிகவும் உறுதியாகக் கூறியிருப்பது வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால் அவர் இவ்வாறு கூறியிருப்பது அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் காலம் என்பது தான் சிந்திக்க வைக்கின்றது.

ஜனநாயகக் கட்சி என்றாலும் சரி, குடியரசுக் கட்சியென்றாலும் சரி அவர்கள் உலகின் பொலிஸ்கார னாக அமெரிக்காவை வைத்திருப்பதையே கொள்கையாகக் கொண்டவர்கள் ஆனால் ஐ.நா செயலாளரின் குற்றச் சாட்டு இன்றைய குடியரசுத் தலைவர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷுக்கு எதிரான அலைக்கு வலுச் சேர்க்குமா? என்பது ஆய்வாளர்களின் கேள்வியாகும்.

ஈராக்கினால் குவைத் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பை முறியடிக்க அமெரிக்கா போர் தொடுத்தது. அப்பொழுது இன்றைய குடியரசுத் தலைவரின் தகப்பனார் அமெரிக்க அதிபராக இருந்தார். அந்தப் போரில் வெற்றி கொண்ட தகப்பன் புஷ்ஷை அடுத்து வந்த தேர்தலில் மக்கள் நிராகரித்து விட்டனர். எனவே இன்று மகன் புஷ் மேற்கொண்ட சட்டவிரோத ஈராக் போரின் பின்னர் நடைபெறும் தேர்தலில் மக்கள் என்ன தீர்ப்பளிப்பர் தகப்பனுக்கு ஏற்பட்டகதி மகனுக்கும் ஏற்படுமா? கொபி அனானின் குற்றச்சாட்டை அமெரிக்க மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? தேர்தல் பதில் சொல்லும்.

செய்திக் கட்டுரை....

கணேஸ்

# பராமரிப்பு வசதிகள் இன்றி அழிந்துபோகும் வரலாற்றுச் சான்றுகள்



கலாசார அமைச்சின் தொல்பொருள் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் வரும் யாழ். நூதனசாலை, கடந்த பல தசாப்தங்களாக எந்த விதமான திருத்தங்களோ பராமரிப்போரின்றி அழிவடைந்துவருவது வரலாற்றுத்துறை சார்ந்தவர்களிடையே மட்டுமன்றி மாணவர்கள், ஆசிரியர்களிடையேயும் கவலை ஏற்படுத்தும் ஒன்றாகவே உள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட விலை மதிக்க முடியாத வரலாற்றுச் சான்றுகள் போதுமான பராமரிப்பு, பாதுகாப்பு வசதிகளின்றி, தூசு படிந்து கறையான் அரித்துக் காணப்படுவது, சமூக பொறுப்புரியவர்களைக் கவலைப்பட வைக்கின்றது.

1945 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்புத்துறையில் இருந்து எடுக்கப்பட்ட 40 அடி நீளமான திமிங்கிலம் ஒன்றினது உடலப் பகுதி வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, இற்றுப்போய் இன்று துண்டு துண்டுகளாகி குவியலாக் கிடக்கின்றது. இவற்றைக் காட்டி இப்பொழுது திமிங்கலம் ஒன்றின் எலும்புகள் தான் இவை என்று சொல்லும் போது நம்ப முடியாத நிலையே காணப்படுகின்றது.

10 ஆம் நூற்றாண்டு தொடக்கம், 17 ஆம நூற்றாண்டு வரையிலான காலத்தின் வரலாற்றுச் சான்றுகளான மதிப்பற்ற பொருட்கள் நூதனசாலையினுள் புழுதி படிந்த இருட்டான அறைகளினுள்ளே அடைக்கப்பட்டிருக்கின்றன. நூதனசாலையினுள் சென்று பார்க்க விரும்புபவர்கள் தம்முடன் கூடவே டோர்ச் லைற் ஒன்றைக்கொண்டு போகவேண்டிய அவசியமுள்ளது. போதுமான மின்சார ஒளியமைப்புக்கள் செய்யப்படாதிருப்பதே இதற்கு காரணமாகின்றது.

வண்ணார் பண்ணைக் கதிரேசன் கோயிலுக்குரிய பலநூற்றாண்டுகளுக்கு முற்பட்ட மரச்சிற்ப வேலைப்பாடுகள் நூதனசாலையினுள்ளே வியக்கவைக்கும் அழகுடன் காணப்படுகின்றன. தடவிப் பார்க்கையில் வியப்பு மேலிட கண்ணீரும் வருகிறது. இவை சரியான பாதுகாப்போபராமரிப்போரின்றி அழிகிறதே என்பதைக் காணும் போது மனம் வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை.

நூதன சாலையினுள்ளே ஓர் அறையின் நடுப்பகுதியில் சுமார் 8 அடி உயரத்துக்கு வரையப்பட்ட ஒரு ஓவியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விக்டோறியா மகாராணியினுடைய ஓவியம் அது என்றும், விக்கிரமராச சிங்க மன்னனது காலத்துக்குரியது என்றும் விளக்கம் தரப்பட்டது. இதன் உண்மைத் தன்மை பற்றிய ஆய்வு இங்கு அவசியமாக்கப்படுவதிலும் பார்க்க, இதனது அழகினையும், ஓவியநுட்பத்தினையும் ஆய்வு செயவதே பெரியதோர் விடயமாக இருக்கும் என்பது பார்வையாளர்கள் பலரதும் கருத்தாகவுள்ளது. அந்த ஓவியத்தின் எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் முழு ஓவியமுமே அக்கோணத்தில் பார்ப்பதான கலை நுணுக்கத்துடன் அழகாக வரையப்பட்டிருக்கும். இந்த ஓவியம் தென்னிலங்கயில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளைக் கூட வியப்படையச் செய்யும் ஒன்றாக உள்ளது. இருந்தும் என்ன, மற்றய பொருள்களைப்போன்றே பராமரிப்பற்றுக் காணப்படும். இந்த ஓவியம் கூட ஒரு பக்கத்தால் சேதமடைந்து வருகிறது. மழைநீர் ஒழுக்கும், கறையானும் போட்டி போட்டு இப்பொக்கிசத்தை சிதைத்து வருகின்றது.

நாவலர் வீதியில், நாவலர் மண்டபத்துக்கு தெற்குப் புறமாக நூதனசாலை ஒன்று இருப்பதே வெளியே தெரியாத வகையில், தூசும், கறையும் படிந்து காணபபடும் கடடிடத்திலேயே தற்பொழுது யாழ். நூதனசலை அமைந்திருக்கிறது. அவை அனுராதபுரம், கொழும்பு, போனற இடங்களிலுள்ள நூதனசாலைகள் போல் வசதிமிக்கதாகவும், பராமரிப்பு பயன்பாட்டுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை என்பது மறுக்கப்பட முடியாததாகும். அத்துடன், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உளள நூதன அலுவலகத் தினாலேயே நிர்வகிக் கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தககது.

யாழ்ப்பாண நூதன சாலையின் நிர்வாகத்தின கீழ், ஊர்காவற்துறை கோட்டை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை, மாதகல் சம்பில்துறை, சங்கானை தேவாலயம், யாழப்பாணக் கோட்டை, கந்தரோடை தூபிகள், அசசுவேலி தே வாலயம், நல்லூர் சங்கிலிய அர சனின் முகப்பு வாசல், மந்திரி மனை, ஜமுனா ஏரி, போனற வரலாற்று எச்சங்களது பராமரிப்பு, பாதுகாப்பு, செயற்பாடுகள் போதிய ளவுக்கு இல்லாத நிலையில் கந்தரோடையிலுள்ள தூபிகளது பாதுகாப்பு பராமரிப்புக்கு என்று மட்டும் இரண்டு ஊழியர்கள் நியமிக் கப்பட்டிருப்பதும், மற்றயவரலாற்று எச்சங்களது பாதுகாப்பு, பராமரிப்புக்கு என ஒரு ஊழியரைத்தானும் நிய மிக்காதிருப்பதும் குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒருவிடய மாகவுள்ளது.

பெரும்பாலும் 1975 ஆம் ஆண்டுகளில் பணியில் சேர்க்கப்பட்ட, தொழிலாளர்கள், என்ற பணித்தரத்துடனான பன்னிரு ஊழியர்கள் இன்று கூட அதே பணித்தரத்துடனேயே இருந்தபடி, தங்களால் முடியுமான அளவுக்கு இந்த நூதன சாலையை இன்று பராமரித்து வருவதனைக் குறிப்பிட்டுக் கூறுதல் அவசியமாகும்.

கடந்த வருடம் இந்த நூதனசாலையைப் பார்வையிட வந்த ஒரு கனேடியப் பெண்மணி, இங்குள்ள



பொக்கி சங்களைப் பார்வையிட்டு, அவற்றின் நிலைகண்டு வேதனை அடைந்து, தனது சொந்தப் பணத்தில் சில பராமரிப்பு வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டுச் சென்றதாக அறியமுடிகிறது.

இலங்கைத்தீவின் ஏனைய இடங்களிலுள்ள வரலாற்றுப் பெருமைமிக்க சான்றுகள், பராமரிக்கப்பட்டு வருகையில், எமது யாழ். மாவட்ட வரலாற்றுச்சான்றுகள் இயற்கை, மற்றும் செயற்கை அழிவுகளால் சீரழிந்து போவதை கலாசார அமைச்சு விரும்புகிறதோ என்ற சந்தேகமும், சாதாரணமாகவே எழுகின்றது. எது எப்படி இருப்பினும் எமது எதிர்காலச் சந்ததிக்காக எமது வரலாற்று எச்சங்களைப் பாதுகாத்துக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், ஆர்வலர்களும் உதவுவார்களா?

### அமெரிக்காவின் நியூயோர்க் நகரில்

# இந்திய பிரதமர் மன்மோகன்சிங் முஷாரப்பை சந்தித்துப் பேச்சு!



நியூயோர்க் நகரில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் ஒரு மணி நேரம் சந்தித்துப் பேசினார்கள். அப்போது காஷ்மீர் பிரச்சினை உட்பட இரு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைமூலம் அமைதியான முறையில் தீர்வு காண்பது என இணக்கம் காணப்பட்டது.

இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையில் முதலில் நடந்த பேச்சுவார்த்தையில் மன்மோகன்சிங்குடன் வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்ஷிற், வெளியுறவு செயலாளர் ஷியாம் சரண் ஆகியோரும், பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புடன் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் ம.ஃமூத் கசூரியும், ஊடகத்துறை அமைச்சர் ஷேக் ரசீத்தும் கலந்துகொண்டனர். பின்னர் இரு தலைவர்களும் தனியாகப் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் காஷ்மீர் விவகாரம் உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் இடையேயான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது என்று இரு தலைவர்களும் முடிவு செய்தனர்.

இஸ்லாமாபாத்தில் ஜனவரி 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இடம்பெற்றுள்ள அம்சங்களைக் கருத்திற்கொண்டு - பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தையின் முடிவில் இரு தலைவர்களும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர். கூட்டறிக்கையை முஷாரப் வாசித்தார். கூட்டறிக்கையை வாசிக்கும் கௌரவத்தை தனக்கு மன்மோகன்சிங் வழங்கியதாக அப்போது அவர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தை சுமுகமாகவும், ஆக்கபூர்வமாகவும் அமைந்திருந்ததாகக் கூறினார். தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் உறுதியாக இருப்பதாகவும் வெளிநாட்டு தீவிரவாதிகள் பாகிஸ்தான் மண்ணில் இருந்து செயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்றும், அவர்களை நசுக்குவோம் என்றும் கூறினார்.

பிரதமர் மன்மோகன்சிங் கூறுகையில் - இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள். இன்று நாங்கள் ஒரு புதிய தொடக்கத்தை தொடங்கியிருக்கிறோம். சிரமங்கள் பல இருந்தபோதிலும் நானும், முஷாரப்பும் இணைந்து செயற்பட்டு இரு நாடுகளுக்கும் இடையேயான வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுதுவதில் வெற்றி காண்போம் என்றார்.

# ஜக்குபாய் தள்ளிப் போடப்பட்டது ரஜினியின் புதிய படம் சந்திரமுகி!



ரஜினிகாந்த் நடிப்பதாக இருந்த ஜக்குபாய் படம் தள்ளிப்போடப்பட்டது. சிவாஜி புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் சந்திரமுகி என்ற புதிய படத்தில் ரஜினிக்காந் நடிக்கவிருக்கிறார். இந்தப் படத்துக்கான பூஜை ஒக்ரோபர் முதலாம் திகதி நடக்கவிருக்கிறது.

கடந்த ஏப்ரல் மாதம் ரஜினி, ஜக்குபாய் என்ற புதிய படத்தை தொடங்கப்போவதாக அறிவித்தார்.

அந்தப் படத்துக்கான கதை விவாதம் கோடம்பாக்கத்தில் உள்ள ரஜினிகாந்தின் தோட்டத்திலும், பெங்களூரிலும் நடந்தது.

திடீரென்று ஜக்குபாய் படத்தின் கதை விவாதம் நிறுத்தப்பட்டது.

இயக்குநர்கள் தரணி (கில்லி படத்தை இயக்கியவர்), எஸ்.ஜே. சூர்யா (நியூ படத்தை இயக்கியவர்) ஆகியோரிடம் வேறு கதைகளை ரஜினிகாந் கேட்டதாகப் பேசப்பட்டது.

ஜக்குபாய் படத்தை தயாரிக்கும் திட்டத்தை அவர் . தள்ளிப்போட்டுவிட்டு, சிவாஜி புரொடக்ஷன்ஸ் - ரஜினிகாந்தை வைத்து மிகப் பிரமாண்டமான படம் தயாரிக்கிறது. இந்தப் படத்துக்கு சந்திரமுகி என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது.

இந்தப் படத்தை பி.வாசு இயக்குகிறார். சந்திரமுகி படத்தை பற்றி அவர் கூறியாவது -

சிவாஜி புரொடக்ஷனுக்கு இது 50 ஆவது வருடம். எனக்கும் இது 50 ஆவது படம். எனவே இந்தப் படத்தை வெற்றிபெற வைப்பதில், நான் தீவிரமாக இருக்கிறேன்.

சந்திரமுகி மிகச்சிறந்த கதையம்சம் கொண்டபடம். காதல், இளமை, பொழுதுபோக்கு, நகைச்சுவை ஆகிய அனைத்து அம்சங்களையும் கொண்ட ஜனரஞ்சகமான கதை.

ரஜினி கதையை கேட்டு விட்டு உடனே நடிக்கிறேன் என்று சொல்லி விட்டார். புதுமையான வேடத்தில் அவர் நடிக்கிறார். இவ்வாறு பி.வாசு கூறினார்.

உலக நோக்கு

# தியாகி திலீபன் நினைவு நாள் நிகழ்விலிருந்து

நல்லூரில்...











வடமராட்சியில்...







நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# படுகொலைகளைக் கண்டித்து தூதரகங்கள் முன் ஆர்ப்பாட்டம்!

## இன்று நடத்த ஈ.பி.டி.பி. திட்டம்!

(கொழும்பு)

தமது கட்சி முக்கியஸ்தர்கள் விடுதலைப் புலிகளால் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டுவருவதாகவும் - இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொழும்பிலுள்ள சகல வெளிநாடுகளின் தூதரகங்களுக்கு முன்பாகவும் இன்று ஆர்ப்பாட்டங்களை நடத்தப்போவதாக ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் நெல்சன் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தப் படுகொலைகள் தொடர்பாக வெளிநாட்டுத் தூதரகங்களிடம் இன்று ஆட்சேபனைக் கடிதங்களையும் சமர்ப்பிக்கவுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை - ஈ.பி.டி.பியினர் இன்று மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டத்தின்போது கடந்தவாரம் சுட்டுக் கொல்லப்பட்ட சிங்கம் என்ற வர்ண குலசிங்கத்தின் சடலத்துடன் ஆர்ப்பாட்டம் செய்யவிருப்பதாகக் கூறப்படுகிறது.

# 2 ஆயிரத்து 623 பட்டதாரிகள் பயிற்சியில் இணையவில்லை!

## பிரதி நிதியமைச்சர் தகவல்

வேலையற்ற பட்டதாரிகளை அரசசேவையில் உள்ள வெற்றிடங்களுக்கு உள்வாங்கும் திட்டத்தின் கீழ், பயிற்சிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டோரில் கனிசமானோர் பயிற்சிகளுக்கு சமுகமளிக்கவில்லை என பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட முதலாவது தொகுதி பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் ஆரம்பித்து மூன்று வாரங்களாகியும் 2623 பேர் இதுவரை பயிற்சிகளுக்கு சமுகமளிக்கவில்லை.

இரண்டாவது பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்தார்.

தமிழினத்துக்கு வரும் தடைகளைத் தகர்த்து

# போராடி வெற்றிபெறும் வலிமையுடன் எமது தலைமை இருந்து வருகிறது!

## திலீபன் நினைவு நாள் நிகழ்வில் இளம்பரிதி

(கொழும்பு)

எமது இனத்திற்கு வருகின்ற எந்தத் தடைகளையும் தகர்த்தெறிந்து போராடி மக்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக் கொடுக்கின்ற வலிமையுடன் எமது தலைமை இருக்கின்றது. இதற்கு உறுதுணையாக மாபெரும் மக்கள் சக்தி உள்ளது. இந்த நிலையிலேயே நாம் தற்போது இடைக்கால தன்னாட்சி வரைபு ஒன்றினை முன்வைத்துள்ளோம் என யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்றையதினம் லெப் கேணல் திலீபனின் 17 ஆம் ஆண்டு நிறைவு தின நிகழ்வு - நல்லைக் கந்தன் ஆலய முன்றலில் இடம்பெற்றபோது- அதில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அன்று திலீபனின் கோரிக்கைக்கு இந்திய அரசு மதிப்புக்கொடுத்திருந்தால், அவனுடைய உறுதியான சுதந்திர வேட்கை மிகுந்த போராட்டத்தை கௌரவித்திருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

அதைக் கௌரவிக்கத் தவறியதால், தமிழர்கள் தங்கள் மீது திணிக்கப்பட்ட போரை உறுதியுடன் முகம் கொடுத்து - வந்த நெருக்கடிகளை யெல்லாம் தகர்த்து தங்களுடைய சொத்துக்கள், சுகங்கள் எல்லாவற்றையும் அர்ப்பணித்து, உறுதியான நிலையில் நின்றதனால் இன்று இலங்கைத் தீவிலே இரண்டு சமபலமுள்ள இராணுவங்கள் தோற்றம் பெற்றன.

இராணுவ பலத்தில் மட்டுமே எங்களை ஆக்கிரமித்துக் கொண்டு - அரசியல் ரீதியாக, எமது மக்களுடைய விடுதலைத்தெளிவு, சுதந்திர பற்றுறுதி, இலங்கைத் தீவிலே தமிழர்களுக்கென்றொரு சமமான அதாவது அரச படைகளுக்கு சமமான இராணுவத்தையும், அமைப்புக்களையும், கட்டுமானங்களையும் தோற்றுவிக்கச் செய்தது.

அன்று இரு அரசுகளும் மதிப்பு கொடுக்காததால்தான், எமது உரிமைகளை ஏற்க மறுத்ததால்தான் நாங்கள் எங்களுக்கானதொரு பலமான ஒரு இராணுவ அமைப்பை அரசியல் அமைப்பை கட்டியெழுப்பினோம். சமூக, பொருளாதார, நிர்வாக அரசியல் கட்டுமானங்களை வளர்த்தெடுத்திருக்கிறோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

### அடுத்த...

பெருக்கு ஏற்படக்கூடும்.

நாட்டைச்சுற்றியுள்ள கடல் பகுதிகளில் ஏற்பட்ட தாழமுக்கமே தற்போதைய காலநிலைக்குக் காரணமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேசமயம் காலி, களுத்துறை, இரத்தினபுரி, ஆகிய மாவட்டங்களில் - தாழ்ந்த பிரதேசங்கள் பலத்த மழை காரணமாக நீரில் மூழ்கியுள்ளன.

வெள்ளம் புகுந்த வீடுகளில் இருந்து வெளியேறியோருக்கு சமைக்கப்பட்ட உணவும் அத்துடன் உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்படுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறையில் ஏறக்குறைய 5000 ஏக்கர் நெற்காணி நீரில் மூழ்கியுள்ளன. பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கு சமூகசேவைத் திணைக்களம் இரத்தினபுரி மாவட்டத்துக்கு 25 வள்ளங்களை கொடுத்துள்ளது.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள

# ஊர்காவல் படையினரின் உறவினர்களை ஹெல உறுமய எம்.பி. நேற்று சந்திப்பு!

(திருகோணமலை)

திருகோணமலையில் உண்ணாவிரதம் இருந்துவரும் ஊர்காவல் படையினர் இருவரின் உறவினர்களை ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் கொட்டிபுர சமரகீர்த்தி தேரர் நேற்று நண்பகல் சென்று பார்வையிட்டார்.

ஊர்காவல் படையினர் இருவரின் விடுதலை தொடர்பாக அரசாங்கம் ஒரு இணக்கப்பாட்டுக்கு விரைவில் வரவேண்டும் என்றும், விடுதலைப் புலிகளுடன் பேசி இவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்த கொட்டிபுர சமரகீர்த்தி தேரர், இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை தான் கொண்டுவர விருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது ஊர்காவல் படையினர் இருவரும் விடுவிக்கப்படும் வரை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடவிருப்பதாக தேரரிடம் உறவினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், திருகோணமலையில் இருந்து ஏனைய இடங்களுக்கு கொண்டுசெல்லப்படும் கோதுமை மாவையும், பெற்றோலிய நிறுவனத்துக்கான எரிபொருள் விநியோகத்தையும் தடைசெய்யும் போராட்டம் ஒன்றையும் தாங்கள் விரைவில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்தே நாங்கள் திருகோணமலையில் இவ்வாறானதொரு போராட்டத்தை நடத்துவது அரசாங்கத்துக்குத் தெரிந்திருக்கிறது என உறவினர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

# திலீபன் நினைவுநாள் நிகழ்வுகள்...

நிகழ்வுகள் நடைபெற்ற இடங்கள் யாவும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, தியாகி திலீபனின் திருவுருவப் படம் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்தது.

நல்லூரில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர்களின் தயாரான மேகநாயகி சண்முகலிங்கம் மற்றும் எழுத்தாளரான யேசுராசா, லெப்.றொசானின் தயார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகள் ஏற்றினார். தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை யாழ்., நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து திலீபன் உயிர்நீத்த இடத்தில் அமைக்கப்பட்ட நினைவுக்கல்லை யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்த நினைவுக்கல்லுக்கான மலர்மாலையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், மா.க.ஈழவேந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதின முதல்வர் மற்றும் வண. பிதா ஜெயசேகரம், அடிகளார் மற்றும் மௌலவி இர்பான், கருணாசேகரன், கோணேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கினர்.

நினைவுரையை நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தனும், சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் ஆற்றினர். இந்த நிகழ்வுகள் சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உணர்வெழுச்சியுடன் பங்கேற்றனர்.

தீவகத்தில் புளியங்கூடல் சிறி முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் பொதுச்சுடரையும் தேசியக் கொடியை யாழ்.மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அருணனும் ஏற்றினர். ஈகச்சுடரை ஊர்காவற்துறை பொறுப்பாளர் ரதன் ஏற்றிவைத்தார்.

தீவக கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் த.சத்தியதாசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. இதில் சிறப்புரையை எழுச்சிப்பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், சி.செம்மணன், சர்வதேச மாணவர்பேரவை உறுப்பினர் குகன் ஆகியோர் நிகழ்த்தினர். இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

காரைநகரில் பிரதேச செயலர் வே.சிற்சபேசன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. தேசியக் கொடியை பிரதேசப் பொறுப்பாளர் கானகன் ஏற்றிவைத்தார்.

நெடுந்தீவில் பிரதேசசபை பொது மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் பொதுச்சுடரை போராளி அஜந்தன் ஏற்றினார். தேசியக் கொடியை நெடுந்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன் ஏற்றினார். தொடர்ந்து நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவையின் செயலர் கணேசலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

தென்மராட்சியில் நடைபெற்ற நிகழ்வில் - திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய பவனி சாவகச்சேரி நகரிலிருந்து நிகழ்வு நடைபெற்ற இடமான சங்கத்தானை முருகமூர்த்தி கோவிலடியில் அமைக்கப்பட்ட விசேட மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு பொதுச்சுடரை மாவீரர்களான கோபால், குட்மன் ஆகியோரின் பெற்றோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் ஏற்றிவைத்தார். உருவப்படத்திற்கான மலர் மாலையினை கொடிகாமம் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் அணிவித்தார். இதன் பின்னர் தென்மராட்சிக்கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் க.சந்திரசேகரம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

வடமராட்சியில் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயமுன்றலில் நிகழவுகள் நடைபெற்றன. இங்கு பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றினார். தேசியக் கொடியினை வடமராட்சி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றினார்.

திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை கடற்கரும்புலி கப்டன் அன்புக்கினியவளின் தாயார் புஸ்பவதி, மாவீரர்களான கல்பனா, பவளராணி ஆகியோரின் தாயார் மகேஸ்வரி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.மலர் மாலையினை நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அணிவித்தனர்.

கரவெட்டி பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலர் க.தர்மலிங்கம் தலைமையில் நடந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், சிவாஜிலிங்கம் ஆகியேர் சிறப்புரையாற்றினர். இதன் பின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை, உடுப்பிட்டி நாவலடி மேற்கு இமையாணன் முன் பள்ளி அருகில் திலீபனின் நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இதனை வடமராட்சிக் கோட்ட மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் தமிழரசன் திரை நீக்கம் செய்துவத்தார்.

கிளிநொச்சியில் பிரதான நிகழ்வு கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள சந்திரன் பூங்காவில் இடம்பெற்றது. அத்துடன் கிளிநொச்சி திருமுறிகண்டி ஆலயத்திற்கு முன்னாலும் இடம்பெற்றது. அத்துடன் வன்னியின் பிற இடங்களிலும் நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற்றன.

மன்னாரில் பொதுப் பேருந்து நிலையத்திலும் வவுனியாவில் புலிகளின் மாவட்ட நிர்வாக அலுவலகத்திலும் இடம்பெற்றன.

திருமலையில், மூதூர் சேனையூர் மத்தியகல்லூரி, திருமலை கடற்கரையில் அமைந்துள்ள தியாகிகள் சதுக்கத்திலும் இடம்பெற்றது.

அம்பாறையில், தம்பிலுவில் மகா வித்தியாலயத்திலும், மட்டக்களப்பில் கரடியனாற்றிலும் இடம்பெற்றன. குடும்பிமலைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தளபதிகளில் ஒருவரான பிரபா தேசியக் கொடியை ஏற்றினார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட துணைத்தளபதி ராம், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மாவட்ட மகளிர் அரசியற் துறைப்பொறுப்பாளா உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

(தீ,99,29,113,122,14,04)

# ஒரு இலட்சத்துக்கும்...

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா வருகை தந்திருந்தபோதே 85 ஆயிரம் மக்கள் இந்த இடத்தில் ஒன்று கூடியதாகவும் -

அதற்குப் பின்னர் பொங்கு தமிழ் நிகழ்விலேயே அதிகமான மக்கள் ஒன்று கூடியதாகவும் நாடாளுமன்ற பாதுகாப்பு பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொங்குதமிழ் நிகழ்வில், கலந்து கொள்ள வந்த பொதுமக்களால்- நாடாளுமன்ற முன்புறம் முற்றாக நிரம்பி நாடாளுமன்றத்தின் பின்புற மைதானம் - அருகிலுள்ள பல்கலைக் கழக வளாகம், மற்றும் நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள வீதிகள் ஆகியவற்றிலும் பொதுமக்கள் ஒன்று குவிந்திருந்தனர்.

இந்த நிகழ்வில் குறைந்தது ஒரு இலட்சம் பேர் கலந்து கொண்டிருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில், பெருமளவு மக்கள் கலந்து கொள்ள வந்திருந்ததால் நகரப் பகுதி போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன.

றொறன்ரோ போக்குவரத்துச் சபை தனது வழமையான நேர அட்டவணையை மாற்றி விரைவான நிலக்கீழ் தொடருந்து வசதிகளைச் செய்திருந்தது.

இருந்தபோதும், ஒரு கட்டத்தில் நாடாளுமன்றத்திற்கு அருகேயுள்ள ரயில் நிலையங்களில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக ரயில்கள் மேற்படி நிலையங்களில் மக்களை இறக்காமல், அடுத்தடுத்த ரயில் நிலையங்களில் இறக்கிவிட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# நாகர்கோவில்...

தத்தில் இரு பகுதியினரும் சமனாக முன்னரங்க காவலரணை பின்னகர்த்த வேண்டுமென்ற கண்காணிப்புக்குழுவின் முன்மொழிவை தாம் நிராகரிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

படையினர் தமது முன்னரங்க நிலைகளிலிருந்து பின்னகரமாட்டார்கள். விடுதலைப் புலிகளே யுத்த சூனியப் பிரதேசத்துக்குள் தமது முன்னரங்க நிலைகளை முன்னகர்த்தியுள்ளனர். எனவே விடுதலைப் புலிகளே தமது முன்னரங்க பாதுகாப்பு நிலைகளைப் பின்னகர்த்தவேண்டுமெனவும் பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

முன்னரங்க காவலரணை பின்னகர்த்தவேண்டுமென்ற தமது முன்மொழிவினை நிராகரித்த பாதுகாப்பு அமைச்சின் கடித்தத்தை தாம் பெற்றுள்ளதாக கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

போர்நிறுத்த ஒப்பந்த காலத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தமது முன்னரங்க காவலரணை நகர்த்தியுள்ளதாகவும், எனவே அதனை பின்னகர்த்துமாறும் அரசாங்கம் கோருகின்றது. விடுதலைப் புலிகள் தமது முன்னரங்க காவலரணை முன்னகர்த்தியதற்கு எம்மிடம் போதிய ஆதாரம் உள்ளது.

இவற்றை எமது கண்களால நாம் பார்த்து வருகிறோம். இந்த முன்னரங்க பாதுகாப்பு நிலைகள் முன்னகர்த்தப்பட்டதென்பது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என அரசாங்கம் தெரிவித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - இந்த விடயம் தொடர்பாக அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ட்ரொன் புறுவ்ஹொவ்டே கிளிநொச்சியில் பேச்சு நடத்திய வேளை இருதரப்பும் தமது முன்னரங்க நிலைகளை சமனாக பின்னகர்த்த இணங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.